நேற்று இந்தியா

ஜூன், 1930

7L
Y31m2,N26
N30-5.1
199390

1308 d. No. M. 2475. JANUARY, 1930. Vol. V-1




# "கிராம அபிவிருத்தி"

## பாரஸ்ட்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் பத்திரிகை

ஆபீஸ்: மைலாப்பூர்: மதருஸ்:

### பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | நமது பத்திரிகை:- ... ... ... ... | 1 |
| 2. | நமது யூனியன். ... ... ... ... | 2 |
| 3. | பாரெஸ்டு பஞ்சாயத்து மஹாநாடு. ... | 3 |
| 4. | பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம். ... ... | 5 |
| 5. | தொழில் ... ... | 7 |
| 6. | நமது உணவு. ... ... ... ... | 9 |
| 7. | கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் ... ... ... | 14 |
| 8. | கிராம முன்னேற்ற சம்பந்தமாய் அவசரமாக கவனிக்க வேண்டிய சில விஷயங்கள். ... ... | 16 |
| 9. | கிராம முன்னேற்ற முயர்ச்சிகள். ... ... ... | 17 |
| 10. | சியாமள சிங்கு—ஓர் கதை ... ... ... | 19 |
| 11. | வர்த்தமானக் குறிப்பு. ... ... ... | 25 |


OFFICE OF THE REGISTRAR OF
No. ........
7 MAR 1930

வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி அணா 6.

எடிடர் & மனேஜர்:
ஏ. சுவாமிநாதய்யர் பி. ஏ.

ஆச்சரியமுள்ளது !  அதிசயிக்கத்தக்கது !!

# தாது புஷ்டிக்குத் தங்க ரேக்கை

சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தில் சாப்பிடுங்கள்.

தாதுபுஷ்டிக்கு நிகரான வேறு மருந்து ஒன்றுமேயில்லை. இதை காலை மாலை நோய் பலம்போல் ஒன்றிரண்டு மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தை கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்யும். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்யம், இந்த பருவங்களில் அடையவேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யவும் கிழத்தனத்தை நீக்கி வல்லமை அடையச் செய்வதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. நீரழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், சளி, இருமல் கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு சூலை, கிரந்தி முதலிய சகல கர்ம வியாதிகளும் நீக்கும், பத்தியமில்லை, 100-நாளைக்கு தங்க ரேக்கும் சித்தானந்த சிட்டுக்குருவி லேகியமும் ரூபா 100. 50 நாளைக்கு ரூபா 50, 25 நாளைக்கு ரூபா 25, சிங்கப்பூர் பினாங்கு F. M. S. வாசிகள் சார்ஜு ரூபாய் 2 சேர்த்து முன்பணம் அனுப்பவும். அல்லது அட்வான்சு ரூபா 5 அனுப்பவும்.

காருண்ய கவர்மெண்டாரால் பரீக்ஷிக்கப்பட்டது

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க வெள்ளி பதக்கங்களும் பரிசுபெற்றது.

# சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த அருமையான வீரதத்துவ லேகியத்தை உபயோகித்து இழந்த வீரியத்தத்துவத்தையும் ஆண் சிங்கத்திற்கு ஒப்பான தேக பலத்தையும், மின்னாள் இன்பத்தையும், புருஷ கெம்பீரத்தையும், எழுவகை தாதுக்களின் திடத்தையும் உலக இல்லற வாழ்க்கையின் அநுகூலத்தையும் பெற வில்லை என்று ருஜூப்படுத்தும் கனவான்களுக்கு எங்கள் மருந்துசாலையிலிருந்து ரூபா 5000 வெகுமதி அளிக்கப்படும்.

மேலே சொல்லும் 5000. ரூபா வெகுமதிக்காக 14-8-20-ல் எங்கள் பேரால் கிரயமானதும் தற்காலம் ரூபா பதினாயிரம் மதிப்புள்ளதும், கவர்மெண்டின் சட்டபடி 10 ரூபா ஸ்டாம்பின்பேரில் எழுதி சர்க்கார் டாக்ளாத்தில் 933-குழி விஸ்தீரண நஞ்சை வகைராக்களை 20-9-20-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொத்தை ஜாமீனாக வைத்து இருக்கிறோம். ஆனதால், கனவான்களே ! சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தை ஒரு முறை பரிசோதித்துப் பாருங்கள்.

ஜெயம் பெறுவீர்கள் !  உள்ளபடி  ஜெயம் பெருவீர்கள் !!

இதன் கிரயம்  [எவ்வித பத்தியமுமில்லை]

96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை ரூபா ... ... 15-0-0.
48 வேளை 24 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 8 0-0.
24 வேளை 12 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 4-4-0.

சவுத் ஆப்ரிக்கா, டிரான்ஸ்வால், சுமத்ரா, ஜாவா, பிலிப்பீஸ், கொச்சின், சீனா, பிஜி முதலிய வெளிநாட்டு ஆர்டர்கள் பார்சல் செலவுக்கு ரூபா 2 சேர்த்து முன் பணம் அனுப்பவும்.

# தாமரை லிங்கத் தைலம்.

கனவான்களே ! இந்த அருமையான தைலத்தை மூன்று தடவை போதுமளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவிகளின் மீது தேய்த்த உடன் தாங்கள் இதுவரை பாராத ஆச்சரியத்தை தரும்படியான கருவிகளைப் பெருகச்செய்து நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகுமென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகர பாட்டில் விலை ரூ. 1 வி. பி. பாக்கிங் செலவு பிரத்தியேகம்.

எங்கள் விலாசம்:— **ஸாஹேபியா மருந்துசாலை,**

நெ. 146, பிராட்வே, சென்னை.

ஆர்டர் செய்யும்போது பத்திரிகை பேரை குறிப்பிடவும், கேட்லாக் இனாம்.

# 1895-ம் வருஷம் ஸ்தாபிக்கப் பட்டது

## பழமையான கரூர் ரத்ன வியாபாரிகள்.

நாம் வைரங்கள் முதலியன விற்கும் போதே "காரண்டீ" செய்கிறோம். இஷ்டமிராவிடில் சரக்குகளை மாற்றிக்கொள்ளவாவது திருப்பி பணம் பெற்றுக்கொள்ளவாவது செய்யலாம்.

எங்களுடைய உத்திரவாதமே உங்களுக்கு ஒரு பொருப்பாகும். நீங்கள் நம்மிடம் தபால் மூலமாகவும் வியாபாரம் செய்யலாம்.

நம்முடைய வெள்ளி தினுசுகள் சுத்த வெள்ளியினால் கையினால் செய்யப்பட்டவை. அவைகள் கனமாகவும், கண்ணியமாகவும் நூதன தினுசுகளாகவுமிருக்கும்.

இந்த வியாபாரத்தில் எங்களுக்கு 35 வருஷங்களுக்கு மேல் நல்ல அனுபவமுண்டு.

ஆதலால் நம்முடைய அனுபவத்தால் நீங்கள் லாபமடைய இதுவே நல்ல தருணம்.

## ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,

வைர, ரத்ன, வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட். மதராஸ்.

OFFICE OF THE RE
No.
7 - MAR

## ஸ்ரீ ஆகாம அபிவிருத்தி (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்

| ஜனவரி பிப்ரவரி | தை | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | செ | சது 1-7<br>0பவு53-42 | திரு7-19 | ம7சி | கரிநாள், பொங்கல் காலை 9க்கு அடுப்பு திறக்க |
| 15 | 2 | புத | பிர 48-28 | புன3-10<br>பூச55-13 | சி60 | கரிநாள் மாலை நாலரைக்கு மேல் மாட்டுப்பொங்கல் |
| 16 | 3 | வி | துதி42-24 | ஆயி54-22 | சி54அ | கரிநாள் |
| 17 | 4 | வெ | திரு37-22 | மக51-11 | ம51சி | யந்திரம் வாங்க |
| 18 | 5 | சனி | சவு32-25 | பூர48 25 | சி48ம | சுபம் நீக்க |
| 19 | 6 | ஞா | பஞ்29 7 | உத்45-27 | அ45சி | மகரம்விவாகம்உபநயனம் |
| 20 | 7 | தி | சஷ்25-19 | அஸ்43-19 | சி43ம | கர்ணபூஷணமுகூர்த்தம் |
| 21 | 8 | செ | சப்22-24 | சித்44-27 | சி60 | இரவு கிழக்கு பிரயாணம் |
| 22 | 9 | புத | அஷ்21-39 | சுவா44-44 | சி60 | மகரம் விவாஹம் |
| 23 | 10 | வி | நவ21-42 | விசா46-19 | சி60 | மாலை கிழக்கு பிரயாணம் |
| 24 | 11 | வெ | தச21-24 | அநு50-27 | சி60 | கரிநாள் |
| 25 | 12 | சனி | ஏகா24-5 | கே54-25 | சி60 | சுபம் விலக்க |
| 26 | 13 | ஞா | துவா29-39 | மூல58-44 | அ59சி | மகரம் நூதனவியாபாரம் |
| 27 | 14 | தி | திர32-40 | பூரா60-0 | ம60 | தானியம் வாங்க |
| 28 | 15 | செ | சது39-19 | பூரா5,24 | சி5ம | இரவு பெண்கேட்க |
| 29 | 16 | புத | ● அ43-44 | உத்ர12-19 | அ12சி | மாலை மேற்கில்பிரயாணம் |
| 30 | 17 | வி | பிர 50-9 | திரு18 40 | சி60 | கரிநாள் |
| 31 | 18 | வெ | துதி52-20 | அவி25-26 | சி60 | மாலை கெர்ப்பாதனம் |
| 1 | 19 | சனி | திரு56-24 | சத29-17 | அ29ம | காலை வடக்கு பிரயாணம் |
| 2 | 20 | ஞா | சது57-58 | பூரட்33.19 | சி33அ | மாலை ருதுசாந்தி |
| 3 | 21 | தி | பஞ்60-0 | உத்36.46 | சி60 | கும்பம் விவாஹம்உபநய |
| 4 | 22 | செ | பஞ்2-2 | ரே36-46 | சி60 | கிழக்கு பிரயாணம் (னம் |
| 5 | 23 | புத | சஷ்1-10 | அஸ்40.26 | அ40சி | ரதசப்தமி |
| 6 | 24 | வி | சப்0-8<br>அஷ்56-46 | பர38-25 | சி38ம | சுபம் நீக்க |
| 7 | 25 | வெ | நவ53-38 | கி37-26 | சி37ம | மாலை அபிஷேகம் |
| 8 | 26 | சனி | தச48.40 | ரோ34-24 | சி60 | காலை வடக்கு பிரயாணம் |
| 9 | 27 | ஞா | ஏகா43-49 | மிரு31-10 | சி60 | கும்பம் விவாஹம் |
| 10 | 28 | தி | துவா39-24 | திரு26,54 | சி27அ | கிழங்கு நட |
| 11 | 29 | செ | திர31-2 | புன22.19 | சி60 | தான்யம் வாங்க விற்க; |

## இராகுகாலம் முதலியன.

[சூரியன் உதயம் 6 மணிக்கு ஆகும் நாட்களுக்கு]

| வாரங்கள் | இராகு காலம் | குளிகை காலம் | எமகண்டம். |
|---|---|---|---|
| ஞாயிறு | மாலை 4½—6 | மாலை 3—4½ | மாலை 12—1½ |
| திங்கள் | காலை 7½—9 | மாலை 1½—3 | காலை 10½—12 |
| செவ்வாய் | மாலை 3—4½ | மாலை 12—1½ | காலை 9—10½ |
| புதன் | மாலை 12—1½ | காலை 10½—12 | காலை 7½—9 |
| வியாழன் | மாலை 1½—3 | காலை 9—10½ | காலை 6—7½ |
| வெள்ளி | காலை 10½—12 | மாலை 7½—9 | மாலை 3—4½ |
| சனி | காலை 9—10½ | காலை 6—7½ | மாலை 1½—3 |

199390
சென்னை-600 00


## தி யுனைடெட் நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்:

தலைமை ஆபீஸ்: கராச்சி.

நீங்கள் பாலியரானால்,

உங்களுக்கு தகுதியான வேலை நம்மிடம் கிடைக்கும்.

நீங்கள் வயோதிகரானால்,

நம்மிட கம்பெனியின் ஏஜெண்டாக நீங்கள் வேலை செய்யலாம் அப்படிச் செய்தால் உங்களுக்கு தக்க ப்ரதிபலன் கிடைப்பதோடு, உங்களுக்கு அது மெத்த திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கும்.

அரையணா செலவு செய்து முழுவிவரம் கேளுங்கள்.

நாம கொடுப்பவை:—

(1) குறைந்த செலவில் புதுமையான பாலிஸிகள்.

(2) வயதானவர்களுக்கு தக்க வருமானம்.

(3) வெளியில் நமது ஏஜண்டாக வேலை செய்பவர்களுக்குள் ஒருவருக்கு நமது கம்பெனியின் மேல்பார்வை கமிட்டியில் ஒருஸ்தானம்.

மற்ற விவரங்கட்கு விலாஸம்:—

மானேஜிங் ஏஜண்டுகள்,
யுனைடெட் நாஷனல் இன்ஷூ-
ரேன்ஸ் கம்பெனி லிமிடெட்,
ட்ரீட ரோட், கராச்சி.



### ரப்பர் ஸ்டாம்புகள்.

பதக்கங்கள் பரிசு பெற்றவை
குறைந்த துகை — — — சிறந்த
வேலைப்பாடு திருப்தியைத்தந்திடும்,
இன்றேல் பணம் வாபீஸ்.
கேடலாக் இனாம்.
மதராஸ் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,
தபால் பெட்டி 74. மதராஸ்.



### RUBBER-STAMPS

— AWARDED MEDALS —
LOWEST PRICES — BEST QUALITY
SATISFACTION GUARANTEED
OR YOUR MONEY BACK.
CATALOGUE free.
The Madras Rubber Stamp Mfg. Co.
POST BOX 74, MADRAS.



### రబ్బరు స్టాంపులు.

మెడల్సు పొందినవి.
వెలసరసము పలమునకును
తృప్తి మేము ఇత్రవాదము,
లేనియెడల మీసొమ్ము వాపసుయిచ్చెదము
కేటలాగ్ ఇనాము
ది.మదరాసు రబ్బరు స్టాంపు కంపెని.
తపాలు పెట్టె 74, మద్రాసు.

### எலிமெண்டரி ஸயன்ஸ் பாடங்கள்.

(தமிழில்)

[வீரவநல்லூர் ஹிந்து ஸெகெண்டரிஸ்கூல் உதவி ஆசிரியரான எம். எஸ். சுப்ரமணியன் அவர்களால் எழுதப்பட்டவை]

1. முதல் பாரத்திற்கு ரூ. 0–10–0
2. இரண்டாவது ,, 0–10–0
3. மூன்றாவது ,, 0–12–0
4. நான்காவது வகுப்பிற்கு 0– 0–5

1, 2 புத்தகங்கள் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

புத்தகங்கள், ஷை ஆசிரியரிடமிருந்தாவது, மைலாபூர் மாரி செட்டித்தெருவு 2. நெ. வீடு கே. எஸ். எம்.சர்மா விடமிருந்தாவது பெற்றுக் கொள்ளலாம்.

நேர்த்தியான காகிதத்தில் குறைந்த சந்தாவில்

நல்ல பத்திரிகை! நவீன பத்திரிகை!!

"தமிழ் நாட்டு மாடேன் ரெவியூ"

என்று பல பத்திரிகைகளாலும் அறிஞர்களாலும்
புகழ்ப்பெற்ற உயர்ந்த மாதப் பத்திரிகை!!!

"பாரதி"

ஆசிரியர்:— ரா. நாராயணஸ்வாமி அவர்கள்

வருட சந்தா ரூ 2. அயல் நாடுகளுக்கு ரூ 2—8—0 அல்லது 4 ஷில்லிங்

மனேஜர், "பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், தென்னிந்தியா.

---

கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபிவிருத்தியையும், பாஷாபிமானத்தையும் கருதியுழைக்கும் தேசிய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவொன்றே

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபால் செலவுடன் இந்தியா, பர்மா சிலோன் முதலிய இடங்கட்கு அணா-12. பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்கட்கு ரூ 1. தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6

மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்,
64, முல்லாசாயபு வீதி, சௌகார்பேட்டை, சென்னை.

---

கம்ம பாலன்

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் சிறந்த தமிழ்ப் பத்திரிகை. பத்திராதிபர்:— ஸ்ரீ ஆர். வேங்கடசாமி நாயுடு: வருடசந்தா தபால்செலவுட்பட ரூபா ஒன்றுதான். விளம்பரவிகிதத்திற்கு மானேஜருக்குக் கெழுதுங்கள், மாதிரிக்காப்பி இலவசம், இன்றே எழுதுக. மானேஜர், கம்மபாலன் ஆபீஸ் திருத்தங்கல் Po. இராமநாதபுரம் ஜில்லா, (Ramnad Dist)

---

இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக் கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள் முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர். இந்திய விவசாயம் ஆபீஸ்;
தெப்பக்குளம் போஸ்ட்; திருச்சினாப்பள்ளி.

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிட்டர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் V ஜனவரி 1930. நெ. 1.

## நமது பத்திரிகை.

இச்சஞ்சிகையிலிருந்து நமது பத்திரிகையின் 5-ம் மலர் தொடங்கியது. நம்மை ஆதரித்து வருகிற சந்தா நேயர்களுக்கும், பாரெஸ்டு பஞ்சாயத்தார்களுக்கும் நம்முடைய வணக்கமான வந்தனத்தைச் செலுத்துகிறோம். நமது பத்திரிகைக்கு கட்டுரைகளை எழுதி வந்த ஆசிரியர்களுக்கும் நன்றி பாராட்டி வந்தனமளிக்கிறோம். சந்தா நேயர்களும், பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களும் பத்திரிகையின் அபிவிருத்தி சம்மந்தமாகத் தங்களுடைய யோசனைகளை இடைவிடாமல்ச் சொல்ல வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

1926-ம் வருஷத்தில் நடைபெற்ற பாரெஸ்டு பஞ்சாயத்தார் மஹாநாட்டின் 17வது தீர்மானத்தின்படி இப்பத்திரிகையானது ஏற்படுத்தப் பட்டது. பஞ்சாயத்துகளின் அபிவிருத்தியைப் பற்றி அப்போதுக்கப்போது சர்க்காருக்கும் ஜனங்களுக்கும் தெரிவிப்பதற்காகவும், பஞ்சாயத்துகளின் மேன்மைக்காக உழைப்பதற்காகவும், கிராம ஜனங்களின் நிலைமையை மேன்படுத்துவதற்காகவும் ஒரு மாதாந்திர பத்திரிகையை வெளிப்படுத்த வேண்டுமென்று அத்தீர்மானம் கூறிற்று. பஞ்சாயத்துகளின் குறைகளையும், பஞ்சாயத்தார்களின் குறைகளையும் பற்றி நமது பத்திரிகை வாதிக்க வேண்டுமென்றும் அதில் கூறப்பட்டிருக்கிறது. நமது பத்திரிகையானது மேற்கூறிய நோக்கங்களின் படியே நடத்தப்பட்டு வருகிறது. ஆனபோதிலும் பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் இன்னமும் தங்களுடைய கஷ்டங்களையும் குறைகளையும் எடுத்துக் காட்டிக் கட்டுரைகளை நமக்கு எழுதியனுப்புகிறதில்லை. நாம் பல தடவைகளில் இவ்விஷயமாகத் தூண்டி வந்தும் பஞ்சாயத்தார்கள் நம்முடைய வார்த்தைகளைக் கவனியாமலிருப்பதைப் பற்றி நாம் விசனிக்கிறோம். இனியாவது அவர்கள் பாரெஸ்டு பஞ்சாயத்து விஷயங்களிலும், கிராம முன்னேற்ற விஷயங்களிலும் சிரத்தையை யெடுத்துக்

கொண்டு, தங்களுக்கு தோன்றுகிற குறைகளையும், சீர்திருத்த யோசனைகளையும் நமக்குத் தெரிவிக்க வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்வோம். இச்சந்தர்பத்தில் நாம் இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டியதாக விருக்கிறது. அநேக பஞ்சாயத்துகள் சந்தாத் தொகைகளை பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையை நடத்துவதில் அதனால் அசௌகரியங்கள் உண்டாகின்றன. ஆகவே, பாக்கிகளை உடனே அனுப்பும்படி பஞ்சாயத்துகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

## முக்கிய அறிவிப்பு.

"ரூரல் இந்தியா" சந்தாதார்களுக்கும் இதர பஞ்சாயத்து பிரசிடெண்டுகளுக்கும்:—

நமது ஆபீசுக்கு சந்தா தொகைகளை மணியார்டர் மூலமாய் அல்லது எவ்விதம் செலுத்தப்படும் போதும் யூனியன் கணக்கில் பிசகுகள் ஏற்படாமல் இருக்க வேண்டியதை முன்னிட்டு அவர் அவர்களின் பாக்கி அறிவிப்பின் பேரிலும் விலாசத்திலும் குறிக்கப்பட்டிருக்கும் பதிவு நெம்பரை மணியார்டர் கூப்பனிலாவது அல்லது எவ்விதமாகவோ நமது பத்திரிகை ஆபீசுக்கு தெரிவிக்க வேணுமாய் கோரப்படுகிறது.

மானேஜர்.

## நமது யூனியன்.

நமது யூனியன் ரிஜிஸ்தராகி விட்டதென்கிற செய்தி எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டியது. அதன் கணக்குகள் கவர்மெண்டாரால் ஸெர்டிபை பண்ணப்பட்ட ஆடிடரால் பரிசோதிக்கப் பட்டு ஒழுங்காயிருக்கிறதாக ஒப்பு கொள்ளப் பட்டிருக்கிறது. நமது யூனியன் பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் மாஹாண ஸ்தாபனமாக விருக்கிறது. பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் வலுவையடைய வேண்டியதற்கு நமது மாஹாண ஸ்தாபனம் வலுத்திருக்க வேண்டும். நமது மாஹாண ஸ்தாபனமானது பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் க்ஷேமத்தைக் காப்பதுடன் அவைகளின் பாங்கியாகவு மிருக்கிறது. பஞ்சாயத்துகளிடமிருந்து டிபாஸிட்டுகள் கொஞ்சகாலமாகச் சரிவர வருகிறதில்லை. அது ஏன் இப்பொழுது வருகிறதில்லையோ



தெரியவில்லை. பணங்களை இனியாவது பஞ்சாயத்துகள் யூனியனுக்குச் சரிவர அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம். நமது பணங்களை வைத்துக் கொண்டிருக்கிற ஸென்ட்ரல் அர்பன் பாங்கும் சென்னையில் சிறந்த பாங்கி ஆகையால் பணத்தை யனுப்புகிற பஞ்சாயத்துகளுக்கு ஒரு விதத்திலும் யாதொரு பயமும் இருக்க வேண்டியதில்லை.

பஞ்சாயத்துகள் பணத்தை அனுப்பிக் கொண்டு வந்தால்தான் அவைகள் வேண்டிய போது கடன் வாங்கிக் கொள்வதற்குப் பண முதல் விருத்தியாகும். 1926-ம் வருஷம் நடந்த பாரெஸ்டு பஞ்சாயத்தார் மஹாநாட்டின் 16-வது தீர்மானத்தின் படி நமது யூனியன் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அத்தீர்மானத்தில் பஞ்சாயத்துகள் பணங்களை யூனியனின் பாங்கில் போட வேண்டுமென்றும், அப்பணங்களை யூனியன் ஏழைப் பஞ்சாயத்துகளுக்கு வேண்டும் பொழுது கடன் கொடுக்க உபயோகிக்க வேண்டுமென்றும் கூறிற்று. பஞ்சாயத்துகள் கிரமமாக டிபாஸிட்களை யனுப்பினாலொழிய மேற்கூறிய நோக்கங்கள் பயன்படா. அந்நோக்கங்கள் பயன் படவேண்டுமென்றே இவ்வியக்கம ஏற்பட்டதாகையால், ஒவ்வொரு பஞ்சாயத்தும் இனியாவது டிபாஸிட்டுகளைத் தவராமல் அனுப்ப வேண்டுமென்று இன்னொரு தடவை வணக்கமாய்க் கேட்டுக் கொள்வோம்.

## பாரெஸ்டு பஞ்சாயத்து வருஷாந்திர மாஹாண மஹா நாடு.

சென்ற வருஷத்தில் ஓங்கோலில் நடை பெற்ற மஹா நாட்டில் அடுத்த மஹா நாடு இவ்வருஷத்தில் முன் மாதங்களிலேயே திருச்சினாப்பள்ளியில் நடக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. ஆனபோதிலும், இதுவரையில் அம்மஹாநாட்டைப் பற்றி ஒரு ஏற்பாடும் கைக்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை. நமது இயக்கம் வலுவையடைந்து அபிவிருத்தியாவதற்குப் பிரதி வருஷமும் மாஹாணக் கான்பரன்சுகளும், ஜில்லாக் கான்பரன்சுகளும் தவராமல் நடை பெற வேண்டும். மாஹாணக் கான்பரன்சுகளுக்கு திவான் பஹதூர் பி. முனிஸாமி நாயிடுகாருவைப் போன்ற பிரமுகர்களைத்தான் அக்ராஸனாதிபதிகளாக அமைக்க வேண்டும். அடுத்த மாஹாண மஹாநாட்டில் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் சட்ட பூர்வமான அந்தஸ்தை யடைய வேண்டிய விஷயமாய் ஒரு தீர்மானம் கைக்கொள்ளப் பட வேண்டும். பஞ்சாயத்துகளின் நிர்வாஹ சம்பந்தமாயும், அபிவிருத்தி சம்பந்தமாயும் இன்னும் அநேக முக்கிய விஷயங்கள் அம்மஹாநாட்டாரால் ஆலோசிக்கப்பட வேண்டும். சிலமாதங்களுக்கு முன் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் பிரதிநிதிகள் கவர்மெண்டில் பாரெஸ்டு மெம்ப

ராகவிருக்கும் கனம். ஏ.ஒய்.ஜீ. காம்பெல் அவர்களை பேட்டி கண்டு அவ்விடத்தில் குறைப் பத்திரத்தைக் கொடுத்தார்கள். அதுவிஷயமாக ஒரு உத்திரவும் இது வரையிலும் கிடைக்கவில்லை. அடுத்த மாஹாணக் கான்பரன்சு கூடவேண்டியகாலம் கிட்டி விட்டபடியால் கவர்மெண்டார் குறை பத்திரத்தின் சம்மந்தமாக உத்திரவைச் சீக்கிரம் அனுப்பவேண்டுமென்று வெகு வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

கொஞ்ச காலம் வரையில், அதாவது பாரெஸ்டு பஞ்சாயத்துகளெல்லாம் முழு அபிவிருத்தியை யடைகிற வரையில், மாஹாண மஹாநாடுகள் சென்னையிலேயே நடைபெற வேண்டுமென்று அநேகர் யோசனை சொல்லுகிறார்கள். அந்த யோசனை சரியானதென்றே நமக்கும் தோன்றுகிறது. மாஹாண மஹாநாடுகள் சென்னையில் பிரதிவருஷமும் நடைபெற வேண்டியதுடன், ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிலுள்ள பஞ்சாயத்துகளின் மஹாநாடுகளும் நடைபெற வேண்டியதும் அவசியமே. இன்னமும், பஞ்சாயத்துகள் ஐக்கிய உணர்ச்சியையும் பஞ்சாயத்து ஊழிய சிரத்தையையும் அடைவதற்குத் தமிழ்நாட்டுப் பஞ்சாயத்து மஹாநாடென்றும், ஆந்திரதேச பஞ்சாயத்து மஹாநாடென்றும் தனித்தனி மஹாநாடுகளும் கூட பிரதிவருஷமும் நடத்தப்படலாம். பஞ்சாயத்துகளின் நிலைமைகளும் விஷயங்களும் பிரதேசத்திற்கேற்றபடி பேதப்படக் கூடும். பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் நன்றாகவேலை செய்து வருகின்றனவென்று கவர்மெண்டார் ஒப்புக்கொண்டு வந்தபோதிலும், அவர்கள் அவைகள் கேட்டு வருகிற வேண்டுகோள்களுக்கு இணங்கி, தக்க உத்திரவுகளை அனுப்புகிறதில்லை. பஞ்சாயத்துகளுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்து இன்னமும் ஏற்படாமலிருப்பது ஒரு பெரிய குறை. வருகிற மஹாநாட்டில் இதைப்பற்றி ஒரு தீர்மானம் கைக்கொள்ளப்பட வேண்டும். 1926ம் ௵த்தில் நடைபெற்ற மாஹாணக் கான்பிரன்சில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. அவைகளின் சம்பந்தமாகவும், பிறகு நடைபெற்ற மஹாநாடுகளின் தீர்மானங்களின் சம்மந்தமாகவும் கவர்மெண்டார் திருப்திகரமான உத்திரவுகளைப் பிறப்பிக்கிற வரையில் பாரெஸ்டுப் பஞ்சாயத்து மஹாநாடுகள் அத்தீர்மானங்களை வற்புறுத்திக் கொண்டே வரவேண்டும்.

அடுத்த மஹாநாட்டோடுக் காட்டுப் பொருள்க் காக்ஷி ஒன்று நடத்தப்படவேண்டும். பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்கள் பொருள்களைச் சேகரித்துக் கொண்டு, காக்ஷிக்கு வந்து அவைகளைப் பற்றி பஞ்சாயத்தார்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பஞ்சாயத்துக் காடுகளை நிர்வாகம் செய்வதிலும், அபிவிருத்தி செய்வதிலும் உள்ள விஷயங்களையெல்லாம் பற்றி அவர்கள் தக்க யோசனைகளைச் சொல்ல வேண்டும். ஆகவே, அடுத்த மாஹாண மஹா நாட்டைக்கூட்ட வேண்டிய விஷயத்தில் பஞ்சாயத்தார்கள் உடனே முயர்ச்சிகளை ஆரம்பிக்க வேண்டும். கவர்மெண்டாருக்கும், ரெவினியூ போர்டாருக்கும், கலெக்டர்களுக்கும் உடனே எழுதிக் கொண்டு அவர்களின் ஸஹாயத்தை அடைய வேண்டும். கவர்மெண்டாரும், போர்டாரும், கலெக்டர்களும் பொருள்க்காக்ஷி சிறப்பாக நடை பெறுவதில் வெகு சிரத்தை வைத்து ஒத்தாசை செய்ய பின் வாங்க மாட்டார்கள். மஹாநாட்டிற்கும், பொருள் காக்ஷிக்கும், பஞ்சாயத்து ஆபீஸர், அவர்களையும், டிப்டி தாசில்தார்களையும், சௌகரியப்பட்டால், டிவிஷனல் ஆபீஸர்களையும், அனுப்பும் படிக்கும், அவர்களைக் காக்ஷிப் பொருள்களின் சம்மந்தமாக முயர்ச்சியெடுத்துக் கொள்ளும்படி உத்திரவு செய்யும் படிக்கும் கவர்மெண்டாரும், ரெவினியூ போர்டாரும், கலெக்டர்களும் முன்னதாகவே கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.



## பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம்.

சுமார் 13, 14, வருஷங்களாக பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் நடைபெறுகிறது. 1882-ம் ௵த்தில் சென்னைப் பாரெஸ்டு சட்டம் ஏற்பட்டது. இச்சட்டத்தினால் கிராம ஜனங்கள் மேய்ச்சல் ஸம்பந்தமாகவும், விறகு, எருத்தழை சம்மந்தமாகவும் பல அசௌகரியங்களை அநுபவித்து வந்தார்கள். 1882 இலிருந்து 30 வருஷங்கள் வரையில் இவ்வித கஷ்டங்கள் மேல் மேலும் அதிகரித்து வந்தன. 1913-ம் வருஷத்தின் கோடியில் நமது சிறந்த தேசாபிமானியாகிய திவான் பஹதூர் கேசவ பிள்ளை அவர்களின் முயர்ச்சிகளால் கவர்மெண்டார் காடுகளை கிராம ஜனங்களின் நிர்வாஹத்திற்கு ஒப்புவித்துப் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தத் தொடங்கினார்கள். பஞ்சாயத்துகள் கலெக்டர்களின் பார்வையில் அமைக்கப்பட்டன; ஜில்லா பாரெஸ்டு ஆபீஸர்கள் அவ்வகையில் கலெக்டர்களின் உதவி உத்தியோகஸ்தர்களாக வாய்ந்தார்கள். கலெக்டர்களுக்குப் பஞ்சாயத்துக் காடுகளின் விஷயங்களில் மேற்கூறிய பாரெஸ்டு ஆபீஸர்களின் அபிப்பிராயங்களை உயர்வாகக் காணப்பட்டு வந்தன. ரெவினியூ ஆபீஸர்களுக்கும் பஞ்சாயத்துக் காடுகளின் மேற்பார்வை என்பதே இல்லாமலிருந்தது. பஞ்சாயத்துகள் வசூலித்த அதிக மேய்ச்சக் கூலியைக் கவர்மெண்டுக்குக் கிஸ்தியாகக் கட்டி விட்டு காவலாளிகளுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடப் பணமில்லாமலிருந்து கொண்டே இருந்தன. ஆனபோதிலும், காடுகளைச் சரிவர நிர்வஹிக்கக் வேண்டிய கடமை அவைகளைப் பொறுத்திருந்தது. பஞ்சாயத்தார்களுக்கும், கிராம ஜனங்களுக்கும் பஞ்சாயத்துக் காடுகளின் அபிவிருத்தி சம்பந்தமாக, கலெக்டர்களும், பாரெஸ்டு ஆபீஸர்களும் யோசனை சொல்லுகிறதென்கிற வழக்கமே அநுஸரிக்கப்படவில்லை. அவர்களோடு அவ் உத்தியோகஸ்தர்கள்

கலந்து கொண்டதுமில்லை; ஆனால், அவர்கள் அதிகாரம் செலுத்தி பஞ்சாயத்துகளைக் கண்டனம் செய்வதில் வெகு ஊக்கமாக மாத்திரமிருந்து வந்தார்கள். ஆகவே, மறுபடியும் ஒரு தடவை சட்ட ஸபையார் எல்லோரும் முறையிட்டுக் கொண்டார்கள். அதன் பேரில், குடிகளுக்குக் காட்டின் நன்மைகளையும், காப்பாற்றும் விதங்களையும் போதிப்பதற்காகவும், பஞ்சாயத்து ஏற்பாட்டைப் பிரபலமாய்ப் பரவச் செய்வதற்காகவும், 1922-ம் வருஷத்தில் பிரத்தியேக உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப் பட்டார்கள். அவர்கள் சீப் கன்ஸர்வேடரின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப் பட்டார்கள். சீப் கன்சர்வேடர் பஞ்சாயத்துகளை ஆதரித்து வந்தார். 1924-ம் வருஷத்தில் சீப் கன்சர்வேடரும், இதர கன்ஸர்வேடர்களும் பஞ்சாயத்துகளின் வேலைகளைப் பற்றியும் நிர்வாஹ யோக்கியதைகளைப் பற்றியும் வெகு உயர்வாக மொழிந்தார்கள். அதன் பேரில், பாரெஸ்டு பஞ்சாயத்து விஷயங்களின் மேற்பார்வை சீப் கன்ஸர்வேடரிடமிருந்து ரெவினியூ போர்டாரின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுப் பிரத்தியேக உத்தியோகஸ்தர்கள் அதிகமாக நியமிக்கப் பட்டார்கள். பிறகு, பஞ்சாயத்துகளின் வேலைகளை ஒத்திட்டுப் பார்ப்பதற்காகவும், குறைகளைத் தெரிந்து கொண்டு அவைகளைப் பரிகாரம் செய்வதற்கு யோசனைகளைச் சொல்வதற்காகவும், பஞ்சாயத்துகள், குட்டை வெட்டல், காட்டு அபிவிருத்தி செய்யல், சிளைக்காளைகளை வாங்கல், நாகதாளி முதலியவைகளை வெட்டி யெடுத்தல், செடிகளை வைத்தல், ரிஸர்வுகளில் தாழ்ந்த ஜாதியர்களுக்கு வியவஸாய முயர்ச்சிகளில் உதவி புரிதல் முதலிய விஷயங்களில் கடன் கொடுத்து உதவ வேண்டிய நிமித்தம், அவைகளிட மேற்படும் மிகுதிப் பணங்களை ஓர் இடத்தில் சேர்த்து வைத்து பாங்கி ஏற்பாடு செய்வதற்காகவும் பாரெஸ்டு பஞ்சாயத்தார் மாகாண யூனியனைது ஸ்தாபிக்கப் பட்டது. யூனியன் ரிஜிஸ்டராகி விட்ட விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. கணக்குகள் திறமையுள்ள பட்டம் பெற்ற ஆடிடரால் தணிக்கை செய்யப்பட்டு பிசகு மோசம் ஒன்றுமில்லை யென்று ஒப்புக் கொள்ளப் பட்டது. ஆடிடரின் ரிபோர்டும் எல்லோருக்கும் அனுப்பப் பட்டது.

1922-ம் வருஷத்தில் 302 பஞ்சாயத்துகளும் 445 சதுரமைல் மொத்த விஸ்தீர்ண முள்ள பஞ்சாயத்துக் காடுகளு மிருந்தன. இப்பொழுது 1102 பஞ்சாயத்துகளிருக்கின்றன; பஞ்சாயத்துக் காடுகளின் மொத்த விஸ்தீரணமும் $3444\frac{3}{4}$ சதுரமைல்களாகப் பெருகியிருக்கிறது. 1102 பஞ்சாயத்துகளில் 191 பஞ்சாயத்துகள்தான் சரியாய் வேலை செய்கிறதில்லை யென்று சென்ற வருஷத்திய ரெவினியூ போர்டாரின் பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கிறது. சீப் கன்ஸர்வேடரும் மற்ற கன்ஸர்வேடர்களும் ஆதியில் சொன்னபடியே



நமது பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் வெகு திருப்தியாக வேலை செய்கின்றன வென்பதற்கு அத்தாட்சி வேறு வேண்டியதில்லை.

பாரெஸ்டுப் பஞ்சாயத்தியக்கம் நமது தேசாபி விருத்திக்கு வெகு முக்கியமான தென்பதை விவரிக்க வேண்டியதில்லை. பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளுக்குப் பலவகைகளில் குறைகளேற்படக் கூடும். மேலும், காட்டுப்பிரதேசங்களில் வஸிக்கும் பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள்தான் கிராமாந்திரச் சீர்கேடுகளை நன்குணரக் கூடியவர்கள். நமது தாலூக்கா போர்டுகளிலும், ஜில்லா போர்டுகளிலும், ஜில்லா கல்விச் சங்கங்களிலும், பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களில் சிலர் மெம்பர்களாக நியமிக்கப்பட்டா லொழிய கிராமாந்தரங்களிற்கு மேற் கூறிய ஸ்தாபனங்களிலிருந்து ஒருவித நன்மையும் ஏற்படாது. சட்ட சபையிலும் பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களில் ஒருவரும் குடியானவத் தொழிலைச்செய்கிற குடியானவர்களில், ஒருவரும் மெம்பர்களாக நியமிக்கப்பட வேண்டு மென்று கவர்மெண்டாரை வணக்கமாய்க் கேட்டுக் கொள்வோம்.

## தொழில்.

மேனாட்டு தேசங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் சிலர்தான் உழைத்துச் சம்பாதிக்கிறது, மற்றவர்கள் சும்மாவிருந்து கொண்டு அச்சிலர்களின் சம்பாத்தியங்களிருந்தே ஜீவிக்கிறது என்கிற வழக்கமே கிடையாது. குடும்பங்களில் புருஷன், பெண்சாதி வயது வராத குழந்தைகள் இவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். பிள்ளைகள் வயது வந்த உடனே தொழில்களைப் பின்பற்றிக் கொண்டு கல்யாணஞ்செய்து கொண்டு தாய் தந்தையாரோடிராமல் தனித் தனியாகத் தங்களுடைய குடும்பங்களை நடத்துகிறார்கள். பெண்களும் வயதான பின்பு கல்யாணஞ் செய்து கொண்டு தங்களுடைய செலவுகளை யெல்லாம் கணவர்களின் பணங்களைக் கொண்டே நடத்திக் கொண்டும் கணவர்களோடு வாழ்கிறார்கள். தாய் தகப்பன்களும் பிள்ளைகளின் குடும்பங்களோடிருப்பதும் கிடையாது. பந்துக்கள், சிநேகிதர்கள் ஒரு வீட்டிற்கு வந்து மாஸ மாஸமாக விருந்து வருவதென்பதுமில்லை. ஒவ்வொரு வயது வந்த நபரும் ஒரு ஜீவனத்தை நடத்த வேண்டு மென்கிற வழக்கமானது கட்டாயமாய் அநுஸரிக்கப் படுகிறது. ஜனத்தொகையில் ஆண்மக்கள் ஒவ்வொருவரும் உழைத்துச் சம்பாதிப்பதால் ஜனங்கள் பலமுடனும், மனவலிமையுடனும் சுகமாய்வாழ்கிறார்கள். தொழில்கள் மேன்மை யடைகின்றன. செல்வமும் அதிகரித்து வருகிறது. அத்தேசங்களில் பஞ்சம் ஏற்பட்டாலும் அதன் கொடுமை விசேஷமாகத் தெரிகிறதில்லை. மேலும், மேனாட்டில் கல்யாணங்கள் முதலிய விஸ்தாதங்களில் நம்முடைய தேசத்தில் போல் விபரீத வீண் செலவுகள் நடத்தப் படுகிறதில்லை.

நம்முடைய தேசத்திலோ கூட்டுக் குடும்ப வழக்கமிருப்பதால், ஒவ்வொரு குடித்தனத்திலும், தாய், தந்தை, அண்ணன், தம்பி, அவர்களின் மனைவியார்கள், பிள்ளைகள், சகோதரிகள் இன்னும் சில பந்துக்கள் ஆகிய அநேக நபர்கள் இருக்கிறார்கள். பயிரூழிய ஜாதிகளைத் தவிர மற்ற ஜாதியார்களின் குடும்பங்களில் ஒருவன்தான் உழைத்து சம்பாதித்து குடித்தனத்தை நடத்துகிறான். மற்றவர்கள் வீண் போது போக்கிக் கொண்டு அந்த ஒருவனுடைய சம்பாத்தியத்திலிருந்தே ஜீவித்துத் தங்களுடைய சிலவுகளையெல்லாம் நடத்துகிறார்கள். குடும்பங்களில் சம்பாதிக்கிற நபர்கள் மற்றவர்களின் குழந்தைகளின் கல்வி, கல்லியாணம் முதலிய சிலவுகளையும் நடத்துகிறார்கள். ஒரு குடும்பத்தில் ஆண்பிள்ளைகள் 4 பெயர்களாயிருந்தால் ஜனத்தொகையில் ஆண்பிள்ளைகளின் சங்கியையில் 100-க்கு 75 பெயர்கள் ஜீவனோபாயங்களைக் கைப்பற்றாமலிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. அதாவது, நம்முடைய தேசத்தில் ஏறக்குறைய 500 லக்ஷம் வேலை செய்யக் கூடிய ஜனங்கள் ஜீவனோபாயங்களை அநுஸரிக்காமல் மற்றவர்களின் ஸவரக்ஷணையிலிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. இவ்விதமாக சோம்பேறி ஜனங்களை ஒரு தேசம் அதிகமாக வஹித்தால் அத்தேசம் செல்வத்தில் எப்படி உயரும்? மேலும், குடும்பங்களின் யோக க்ஷேமம் சிலவுகளுக்கு அவைகளில் சிலர் மாத்திரம் உழைத்து சம்பாதித்தால் போதுமா? நம்முடைய தேசத்தில் ஜனங்கள் வர வர பலக்குறைவை அடைவதற்கு இதுவே காரணமாகிறது. நம்முடைய தேசத்தில் தொழில்கள் ஓங்காமலிருப்பதற்கும் இதுவே காரணம். அதில் செல்வம் அதிகரிக்காமல் இருப்பதற்கும் இதுவே காரணம். தொழிலகப்படுகிறதில்லையென்று சிலர் கூறுவது பிசகு. நம்முடைய தேசத்தில் சாகுபடிக்கேற்ற நிலங்களில் மூன்றில் இரண்டு பங்குகள் சாகுபடி செய்யப்படாமலே கிடக்கின்றன. இன்னும், நம்முடைய உபயோகத்திற்கு வேண்டிய பல பொருள்கள் நம்முடைய தேசத்திலேயே அதிக கஷ்டமில்லாமல் உற்பத்தி செய்யப்படக் கூடுமென்பதை விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை.

நம்முடைய தேசத்தில் பல ஜனங்கள் பிச்சையெடுத்து ஜீவனம்செய்வதில் ருசியை வஹிக்கிறார்கள். பலமுள்ள ஆண்பிள்ளைகளும் இவ்வித விருத்தியை அநுஸரிக்கிறார்கள். உயர் ஜாதி ஜனங்கள் தொழில்களை நடத்துவது தங்களுடைய அந்தஸ்திற்குக் குறைந்ததென்றெண்ணி பிச்சை எடுப்பதை உயர்வாக எண்ணுகிறார்கள்.

நமது ஜனங்கள் கல்யாணங்களில் வீண் சிலவுகளைச் செய்வதை நிறுத்த வேண்டும்.

நமது தேசத்தில் உழைத்துப் பாடு படுபவர்கள் பயிரூழியர்களும் மற்ற ஜாதி குடித்தனங்களில் உழைத்து சம்பாதிக்கிற நபர்களும் அவைகளிலுள்ள



ஸ்திரீகளும்தான். ஸ்திரீகள் குடும்ப வேலையைச் செய்கிறார்களாகையால் அவர்களை வேலை செய்யாத ஆண்பிள்ளைகளுடன் சேர்க்கக்கூடாது. ஆனபோதிலும், ஸ்திரீகள் ஓய்வு நேரங்களில் வீட்டிற்கு வேண்டிய தையல் வேலைகளையெல்லாம் செய்யலாம். உடுப்புக்களை ஆண் பிள்ளைகளுக்குத் தைத்துக் கொடுக்கலாம், உடுப்புகளை ஸலவை செய்யலாம். பெரம்பு, கோரை, மூங்கில் பிளாச்சு, இவைகளைக்கொண்டு வீட்டிற்கு வேண்டிய பாய்களையும், பெட்டிகளையும், கூடைகளையும் செய்து கொள்ளலாம். நூல் நூற்கலாம். ஜமக்காளங்களையும் கம்பளங்களையும் நெய்யலாம். மேற்கூறிய தொழில்களை அவர்கள் ஓய்வு நேரங்களில் அநுஸரித்தால் அவர்கள் தங்கள் வீடுகளுக்கு வேண்டிய பொருள்களைத் தயார் செய்வதோடு அதிகமான உற்பத்திகளை விலைக்கு விற்று வரும்படிகளையும் அடையலாம்.

ஆனபோதிலும், நமது தேசத்தில் ஆண் பிள்ளைகளில் பெரும்பாலர் ஜீவன விருத்திகளையனுஸரியாமல் பிறருடைய ஸவரக்ஷணையை எதிர்பார்த்து வருகிறதென்கிற கொடிய வழக்கம் நிற்க வேண்டும். இவ்வகையில் ஒரு சட்டமேற்பட வேண்டுமென்றும் கோருவோம்.

## நமது உணவு.

மனித சரீரம் 20 வயது வரையில் தான் வளர்ச்சியை யடைகிறது; 20 வயதிற்குப் பிறகு அது வளர்கிறதில்லை. வளர்ந்து வருகிற பருவத்திலும், பின்பு ஆயுள் முடிகிற வரையிலும், அதன் அவயவங்கள் உழைக்கின்றன. ஹிருதயமானது துடித்துத் துடித்து இரத்தத்தை எல்லாப் பாகங்களுக்கும் பாய்ச்சுகிறது; சுவாஸ கோசங்கள் பிராண வாயுவை உட்கொண்டு, சரீரத்தில் உண்டாகும் கரியமலவாயுவை வெளியே தள்ளுகின்றன; இரைப்பையும் உள்குடலும் உணவை ஜீரணித்துச் சரீரத்தின் போஷணத்திற்கும், வேலைகளுக்கும் வேண்டிய சத்துக்களை இரத்த ஓட்டத்தில் சேர்க்கின்றன; வெளிக்குடலும், மூத்திர கோசங்களும் கழிவுப் பொருள்களை வெளியே தள்ளுகின்றன; மூளை சரீர வேலைகளையெல்லாம் நடத்தி வைக்கிறது; தசைகள் எலும்புகளை அசைக்கின்றன. இவ்விதமாகப் பல பாகங்களும் வேலை செய்து வருவதில் சரீரக்கணங்கள் அழிவை யடைகின்றன. அழியும் கணங்களுக்குப் பதிலாக புதிய கணங்கள் உண்டாக்கப் படவேண்டியிருக்கிறது. ஆகாரத்தில் முதல் முக்கியமான வேலை இதுதான். சரீரப்பாகங்கள் வேலை செய்ய வேண்டியதற்கு உத்தீபனம் வேண்டியிருக்கிறது. உத்தீபன முண்டாகும் பொழுது சரீரச்சூடும் உண்டாகிறது. போஷண சத்துக்களாலும், தீபன சத்துக்களாலும் சரீரத்தின் உயிர் சக்தியானது நிர்மாணிக்கப்படுகிறது. நாம் பிழைத்திருப்பதும் உயிரை மாத்திரம் வஹிப்பதற்காக

வல்ல, நாம் நல்ல பலமுடனும் சக்தியுடனும் வாழ வேண்டுமென்றும் கோருகிறோம்.

சரீர வளர்ப்பை வீடு கட்டுவதோடு ஒப்பிடலாம். வீடு கட்டுவதற்கு கல், மண், சுண்ணும்பு, மரம் முதலியவை தேவை. ஆனல், இவ்வுயிரில்லாத வஸ்துக்களை வீடாக அமைப்பதற்கு கொத்தன், தச்சன், கருமான் முதலிய வேலை யாட்கள் வேண்டும். மேற் கூறிய கட்டிட வஸ்துக்கள் நன்றாயிருந்து, வேலை யாட்களும் திறமையுள்ளவர்களாயிருந்தா லொழிய வீடு சரியாய்க்கட்டப்படாது. வீடு நன்றாய்க்கட்டப்படாமல் போனல் கூரை ஒழுகும், தரை ஈரம் கார்க்கும், சுவர்கள் கெட்டியாயிரா; ஆகவே, கட்டின வீட்டை அடிக்கடி மராமத்து செய்ய வேண்டியிருக்கும். நமது சரீர வளர்ப்பும் அது போலவே தான் இருக்கின்றது. நாம் சாப்பிடுகிற உணவிலிருந்து உள் குடலானது சரீர வளர்ப்புக்கு வேண்டிய சத்துக்களை பிரித்துப் பொறுக்கி அவைகளை இரத்த ஓட்டத்திற் சேர்த்துப் பல பாகங்களுக்கும் அனுப்புகிறது. பாகங்கள் அததற்குத் தேவையானவைகளைக் கிரஹித்துக் கொள்கின்றன. இச்சத்துக்கள் உயிரில்லாதவைகளாதலால் அவைகளை உபயோகித்துக் கட்டுவதற்கு கொத்தன், தச்சன் முதலியவர்களைப் போன்ற வேலையாட்கள் வேண்டும். இவ்வேலை யாட்களில் முக்கியமானது சரீரத்திலுள்ள உயிர்சக்தி. அது இதர சிப்பந்திகளோடு சரீரக்கட்டிட மராமத்து வேலைகளை நடத்துகிறது. மேற் கூறிய சிப்பந்திகள் தான் விடாமின்களென்று சொல்லப்பட்ட அவயவ நிர்மாணப்பொருள்கள். விடாமின்கள் A, B, C, D, E, என்று ஐந்து வகைகளாக விருக்கின்றன. வீடுகட்டுவதில் கொத்தன், தச்சன் முதலிய ஆட்களைப்போல் அவைகள் ஒவ்வொன்றும் தனித்தனியான தொழில்களை நடத்துகின்றன. விடாமின் A என்பது, முக்கியமாக, கண்கள், சுவாஸகோசங்கள், இரைப்பை, உள்குடல் இவ்வவயவங்களை நிர்மாணிப்பதில் வேலை செய்கிறது. விடாமின் B மூளை, நரம்புகள், தசைகள், ஹிருதயத்தின் தசைகள், இரைப்பையின் தசைகள் உள்குடலின் தசைகள் இவைகளின் நிமித்தமாக வேலைசெய்கிறது, விடாமின் C இரத்தத்தின் நிமித்தம் வேலைசெய்கிறது: விடாமின் D பற்கள், எலும்புகள் இவைகளின் நிமித்தம் வேலைசெய்கிறது. ஆனதினல், நம்முடைய உணவுகளில் போஷணை தீபன சத்துக்களோடு விடாமின்களெல்லாமும் நிறைந்திருக்க வேண்டும். விடாமின்கள் உணவுகளில் தக்கபடி அமையாமல் போனல் சரீர பாகங்கள் சரியாய் வேலைசெய்யமாட்டா. விடாமின் D உணவில் சரியாய் அமையாவிட்டால் பற்கள் சீக்கிரத்தில் அழிந்து போம். விடாமின் B இல்லாமல் போனல் தசை உண்டாகாது. விடாமின் A குறைவாயிருந்



தால் சுவாச கோஸங்களும் இரைப்பையும், உள் குடலும் பலக் குறைவையடையும்; சரீரத்தில் பற்பல நோய்கள் உண்டாகும்.

நமது சரீரத்தை நீராவி இயந்திரத்திற்கும் ஒப்பிடலாம். நீராவி இயந்திரம் நீராவி இல்லாமல் போனல் அசையாது. நீர் காய்ச்சப் பட்டு நீராவி ஏற்படுகிறது. நெருப் பில்லாமல் போனல் நீரைக் காய்ச்ச முடியாது. நெருப்பு விறகிலிருந்து உண்டாகிறது. நம்முடைய சரீரத்தில் சரீரச் சூடு இருக்கிறது. அது நம்முடைய சரீரத்தைச் சூடாக வைக்கிறது. அச் சூட்டிற்கு விறகு உணவின் தீபன சத்துகளாகிய கஞ்சித்திரவ பதார்த்தங்களும் (Carbohydrates) கொழுப்புகளும் (fats) தான். அப் பொருள்கள் தீபன சக்தியை நிறம்ப வஹிக்கின்றன. மேற்கூறிய தீபன சக்தியானது தீபன சத்துக்களிலிருந்தும் சில போஷணசத்துக் களிலிருந்தும் சரீரச் சூட்டால் தனிப்படுத்தப் படுகிறது. அது நம்முடைய தேக இயந்திரத்தை வேலை செய்யும்படிச் செய்கிறது.

தீபன சத்துக்கள் சூரிய வெளிச்சத்திலிருந்தே தீபன சக்தியை அடைகின்றன. அது போலவே நம்முடைய சரீரங்களும் சூரியனிலிருந்தும் கூட அச்சக்தியை யடைகின்றன.

நீராவி இயந்திரத்தின் தீயானது காற்றில்லாமல் போனல் எரியாது. அடுப்பில் நெருப்பு நன்றாய் எரியாவிட்டால் நாம் வாயால் ஊதிப் பற்றவைக்கிறோம், அல்லது விசிரியால் விசிறிப் பற்ற வைக்கிறோம். நெருப்பைப் பற்ற வைப்பது ஆகாயத்திலுள்ள பிராணவாயு தான். அது போலவே சரீரச் சூட்டிற்கும் பிராணவாயு தான ஆதாரம். நம்முடைய சுவாஸ கோஸங்களிலுள்ள பிராண வாயு தான் இவ்விதமாக உபயோகப் படுகிறது. நம்முடைய தேகத்திலிருந்து சூடு வெளிக்கிளம்பி தேகத்தைச் சூடாக வைக்கிறது. தேகத்தில் சூடு அதிகமாகாமலிருக்கும் படிக்கும், இரத்தம் தடித்துப் போகாமலிருக்கும் படிக்கும், சர்மமும் தசைகளும் உலர்ந்து போகாமலிருக்கும் படிக்கும் நாம் நீரை அடிக்கடி குடிக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, தேக போஷணம், வளர்ச்சி, மராமத்து, அதன் வேலைகள், சுகஸ்திதி முதலியவைகளின் நிமித்தம் சரீரத்திற்கு வாயு, சூரிய வெளிச்சம், நீர், உணவு ஆகிய நான்கு வஸ்துக்கள் அவசியமாய் வேண்டியிருக்கின்றன.

உணவுகளில் ஊன்பதார்த்தங்களும் (Proteins), உலோக உப்புகளும் (mineral salts), கொழுப்புகளும் (fats) கஞ்சித்திரவ பதார்த்தங்களும் (carbohydrates) விடாமின்களாகிய அவயவ நிர்மாண வஸ்துக்களும் தக்கபடி நிறைந்திருக்க வேண்டும். அவைகளில் ஏதேனும் ஒன்று குறைவாக விருந்தாலும் கூட சரீரத்திற்கு சுகஸ்திதி ஏற்படாது.

199390

உணவுப் பொருள்கள் ஒவ்வொன்றும் மேற் கூறிய சத்துக்களில் சிலவற்றைத்தான் வஹிக்கக் கூடுமாதலால் உணவு தயாரிக்கப் படுவதில் எல்லா சத்துக்களும் தக்க அளவுகளில் அமையும் படியாகப் பல உணவுப் பொருள்கள் ஒன்று கூட்டப் பட்டு அது தயாரிக்கப் பட வேண்டும். அதில் ஏதேனும் ஒன்று அளவுக்குக் குறைவாயிருந்தாலும் சரி, அளவுக்கதிகமாகவிருந்தாலும் சரி, சரீரத்தில் நோய்கள் உண்டாகும்.

ஊன் பதார்த்தங்கள் (proteins) மாம்ஸங்களிலும், பாலிலும், முட்டைகளிலும், மீன்களிலும், அரிசி, கோதுமை, ஓட்ஸ், பார்லி, சோளம் கேழ்வரகு, கம்பு, காய்கறிகள், பழங்கள் முதலியவைகளிலும் இருக்கின்றன. அவைகள்தான் தசை, மூளை, கல்லீரல், ஹிருதயம், மூத்திர கோசங்கள் முதலியவைகளின் வளர்ச்சியைச் செய்கின்றன. உலோக உப்புகள் பற்கள், எலும்புகள் இவைகளின் வளர்ச்சியைச் செய்கின்றன. அவைகள் இரத்தத்தையும் சுத்தமாக வைக்கின்றன. அவ்வுப்புக்கள், பழங்கள், காய்கள் பச்சைக் கீரைகள் முதலியவற்றில் இருக்கின்றன. கொழுப்புகள், வெண்ணெய், எண்ணெய்கள், நெய், மீனெண்ணெய் முதலியவைகளில் இருக்கின்றன. கஞ்சித்திரவ பதார்த்தங்கள் (carbohydrates) இருவகைப் பொருள்கள். மாவு பதார்த்தங்கள் (starches) ஒரு வகை, சக்கரைகள் (sugars) மற்றொரு வகை, கஞ்சித்திரவ பதார்த்தங்களும், கொழுப்புகளும் தீபனப் பொருள்கள். அவைகள் அடுப்புக்கு விறகு எப்படியோ அப்படியே சரீரத்திற்கு வாய்க்கின்றன. சரீரத்திற்குக் கொழுப்புக்களைக் காட்டிலும் கஞ்சித்திரவ பதார்த்தங்கள் அதிகமாக வேண்டியிருக்கின்றன. கஞ்சித்திரவ பதார்த்தங்கள் சீக்கிரம் பத்தக் கூடிய சுள்ளிகளைப் போன்றவை; கொழுப்புகள் மெதுவாய் பத்திக்கக் கூடிய உருட்டுக் கட்டைகளைப் போன்றவை. அரிசி, கோதுமை முதலிய முன் சொல்லப்பட்ட தானியங்களிலும், உருளைக்கிழங்கு போன்ற கிழங்குகளிலும் மாவு பதார்த்தம் இருக்கிறது. சக்கரையானது கரும்பிலும், பழங்களிலும், வெள்ளிக் கிழங்கிலும் இருக்கிறது.

சரீரத்திற்கு மற்ற எல்லாப் பொருள்களையும் காட்டிலும் நீர் அதிகமாய் வேண்டும்.

விடமின் Aயும் Dயும் கொழுப்புகளிலும், பாலிலும், வெண்ணெயிலும் நெய்யிலும், முட்டையிலும், மீன் எண்ணெயிலும், முள்ளங்கி, தக்காளிப்பழம் வெள்ளிக் கிழங்கு, [illegible] முதலியவைகளிலும் இருக்கின்றன. Bயும் Eயும் அரிசி, கோதுமை, சோளம், பார்லி, ஒட்ஸ், கேழ்வரகு, கம்பு முதலிய தானியங்களில் இருக்கின்றன. விடமின் C கீரைகளில் இருக்கிறது. எல்லா விடமின்களும் கீரை வகைகளில் ஒன்று சேர்ந்து [illegible]. ஆகையால் இவைகளில் ஏதேனும் ஒன்று கூட உணவில் தக்கபடி அமை-



யாமலிருக்கக் கூடாது; அளவுக்கு மேலும் இருக்கக்கூடாது. விடமின் A குறைவுபட்டால் சர்மத்தின் உள் பாகங்கள் வரண்டு போம், அதில் கசிவு நீர் உற்பத்தியாகாது. கசிவு நீர் உற்பத்தியாகாத போனால் சுவாஸ கோசங்கள் கண்கள். மூத்திர கோசங்கள் முதலிய உள் அயவங்களுள் விஷக்கிருமிகள் செல்வது தடைபடாது. விஷக்கிருமிகள் எளிதாய் அவைகளில் சென்று சரீரத்தில் க்ஷயம், கண்களைச் சேர்ந்த நோய்கள் நீரழிவு முதலியநோய்களை, உண்டாக்கும்.

நாம் உட்கொள்ளும் பிராணவாயு சுவாஸ கோசங்களில் நிறைந்து விடுகின்றது. சுவாச கோசங்கள் அதை இரத்த ஓட்டத்தில் செலுத்துகின்றன. இரத்த ஓட்டம் அதைப் பல பாகங்களுக்கும் கொண்டு போகிறது. பிராண வாயுவானது இரத்த ஓட்டத்தில் செல்லும் பொழுதும் சரீர பாகங்களை அடையும் பொழுதும், இரத்த ஓட்டத்திலும் சரீரபாகங்களிலும் இரப்பையிலிருந்தும் உள் குடலிலிருந்தும் வந்திருக்கிற தீபன சத்துக்களோடு சம்பந்தித்து அச் சத்துக்களை எரிக்கிறது. அப்பொழுது நமது தேகத்தில் சூடும், தீபன சக்தியும் உண்டாகின்றன. தீ எரியும் பொழுது புகை உண்டாவது போல் தேகத்தில் தீபனஸத்துகள் எரியும் பொழுது விஷ வாயு உண்டாகிறது. அவ்வாயுவானது உடனே உடனே சரீரத்திலிருந்து தள்ளப் பட வேண்டும். இல்லாவிட்டால் நோய்கள் உண்டாகும். ஆதலால், இரத்த ஓட்டமானது அதைத் திரட்டிச் சேர்த்துக் கொண்டு சுவாஸ கோசங்களில் அமைக்கிறது. சுவாஸ கோசங்கள் அதை வெளியே தள்ளுகின்றன. வெளியே தள்ளப்பட்ட பின்பு அவ் விஷ வாயு எனிய கரியமல வாயு (Carbonic acid) ஆகாயத்தில் சேர்ந்து செடிகளுக்கும் மரங்களுக்கும் ஆகாரமாகவாய்கிறது. அக்கரிய மல வாயுவிலிருந்து செடிகள் பிராணவாயுவைத் தனிப்படுத்தி கரியை மாத்திரம் உபயோகித்துக் கொள்கின்றன. நம்முடைய சரீரத்திற்குப் பிராணவாயு அவசியமானதானபடியால் நாம் படுத்துறங்கும் பொழுது ஜன்னல்களையும் கதவுகளையும் காற்றுவரும்படி நன்றாய்த் திறந்து வைத்துக் கொண்டும், ஆழ்ந்து சுவாஸித்துக் கொண்டும் நித்திரை செய்ய வேண்டும். ஜன்னல்களும் கதவுகளும் அடைபட்டிருந்தால் பிராணவாயுவை வஹிக்கிற வெளிக் காற்று அறைக்குள் புகாது, அறையில் நாம் வெளியிடும் விஷவாயுவே அதிகரிக்கும். அவ்விஷவாயுவாகிய கரியமல வாயுவை நாம் உட்கொண்டால் நமது சரீரத்திலுள்ள உயிர்ச் சூடு சரியாய் எரியாது, சரீர வேலைகள் மந்தப்பட்டுப் போகும்; சுவாஸ கோசங்கள் பலக் குறைவடைந்து சரீரத்தில் நாளாவட்டத்தில் க்ஷயரோகம் உண்டாகும். படுத்துறங்கும் பொழுது அநேகர் முகத்தை துணியால் மூடிக்கொண்டு உறங்குகிறார்கள்; அது வெகு கெட்ட அப்பியாஸம். [illegible]

மனிதனுக்கும், மிருகங்களுக்கும் ஜீவிப்பதற்குப் பிராணவாயுவும் உணவு சத்துக்களும் அவசியமானவை. செடிகள் தான் அவைகளைத் தயாரித்துக் கொடுக்கின்றன. செடிகள் இவைகளைத் தயாரிப்பதற்கு சூரிய வெளிச்சம் வேண்டும். சூரிய வெளிச்சம் இல்லாமல் போனால் செடிகள் இவ் வேலையை நடத்த முடியாது. செடிகள், இலைகள் ஆகாயத்திலிருந்து அடைகிற பொருள்களிலிருந்தும், வேர்கள் மண்ணிலிருந்து அடைகிற பொருள்களிலிருந்தும் ஊன் பதார்த்தங்களையும், கொழுப்புகளையும், கஞ்சித்திரவ பதார்த்தங்களையும், அங்கநிர்மாண வஸ்துக்களாகிய விடாமின்களையும் தயார்செய்கின்றன. அவைகள் பிராணிகளால் வெளித்தள்ளப் பட்ட விஷவாயுவையும் கழிவுப் பொருள்களையும் அடைந்து அவைகளைக்கொண்டு நமக்கு வேண்டிய உணவு சத்துக்களை தயாரிக்கின்றன. சூரிய வெளிச்சந் தான செடிகளுக்கு இவ் வேலையைச் செய்வதற்கு தீபன சக்தியைக் கொடுக்கிறது. செடிகள் தாங்கள் சூரியனிடத்திலிருந்து அடைகிற தீபன சக்தியில் சிறிது பாகத்தைத் தாங்கள் உண்டு பண்ணும் கஞ்சித்திரவ பதார்த்தத்தில் சேர்த்து வைக்கின்றன. ஆகவே, தீபன சக்தியானது பிராணிகளுக்கு உணவு சத்துக்களின் மூலமாக அளிக்கப் படுகிறது, சூரியன் தான் ஜீவன்களுக்கு உயிரை அளிப்பவன். சூரிய வெளிச்சம் நோய்க் கிருமிகளைக் கொல்கிறபடியால் சூரியன் ஆரோக்கியத்தையும் அளிக்கிறான். சூரிய வெளிச்சத்தில் எலும்பு வளர்ச்சிக்கும் கலைகோசங்கள், இரத்தம், நரம்புகள் முதலியவைகளின் சக்திக்கும் வேண்டிய விடாமின் D அதிகமாக இருக்கிறது. பிராணிகள் வெய்யலில் நடமாட வேண்டியது அவசியம். இருட்டறைகளில் வசிப்பவர்களுக்கும், எப்பொழுதும் வீட்டிற்குள்ளேயே இருப்பவர்களுக்கும் எலும்புகள் நேராக அமைகிறதில்லை. அவர்கள் பலவித நோய்களையும் அடைகிறார்கள்.

# கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்.

[ராவ் பஹதூர் ஏ. வேதாசல ஐயர் பி. ஏ.]

1912-ம் வருஷத்திய கூட்டுறவு சட்டமும், 1920-ம் வருஷத்திய கிராம பஞ்சாயத்து சட்டமும், கிராம நியாயஸ்தல சட்டமும் கிராம முன்னேற்றத்தை நோக்கமாக உடைத்தா யிருக்கின்றன. ஆகவே, கிராம ஜனங்கள் அச்சட்டங்களைக் கட்டாயமாகக் கற்றறிய வேண்டியிருக்கிறது.

கூட்டுறவு சட்டமானது ஜனங்களைச் செல்வ விருத்தி நிமித்தமாகவும், சில அபிவிருத்தி நிமித்தமாகவும் ஒன்று கூட்டி வேலை செய்யும்படி அமைக்கிறது. கூட்டுறவு உணர்ச்சிகளில் பரோபகாரமும், தியாக குணமும் அமைந்



திருக்கின்றன. கூட்டுறவு ஸங்கங்களில் ஜனங்கள் சேர வேண்டுமென்கிற கட்டாயவிதி ஒன்றுமில்லை. அவரவர்கள் சுவேச்சையாய்த்தான் சேர்கிறார்கள்.

கூட்டுறவு சங்கங்கள் நன்றாய் வேலை செய்ய வேண்டுமானால் அவைகளுக்குப் போதுமான திரவியம் அகப்பட வேண்டும்; அவைகளை நிர்வஹித்து நடத்துவதற்குத் திறமையுள்ள தக்க தலைவர்களும் வேண்டும். அத்தலைமை ஸ்தானத்தை வஹிக்கக் கூடியவர்கள் கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களே.

கிராமப் பஞ்சாயத்து சட்டமானது கிராம ஜனங்களைத் தங்களுடைய பிரதேசங்களில் கல்வி அபிவிருத்தி, சுகாதார ஏற்பாடு, வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு, நீர்ப்பாசனக் குடி மராமத்து முதலிய முயர்ச்சிகளை நடத்துவதற்காக ஒன்று சேர்ந்து உழைக்கும் படி கட்டாயப் படுத்துகிறது. அச்சட்டம் அவர்களுக்கு வரி விதித்துக் கொள்ள அதிகாரத்தையும் கொடுக்கிறது. கிராமப் பஞ்சாயத்துகள் தக்கபடி அமைந்து திருப்தியாக வேலை செய்ய வேண்டுமானால் கவர்மெண்டின் அபிவிருத்தி இலாகாவும், தாலூகா போர்டுகளும், ஜில்லா போர்டுகளும் அவைகளுக்கு ஒத்தாசைகளைச் செய்து வர வேண்டும். இது தவிர, கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கிராமங்களிலேயே வஸித்துக் கொண்டு கிராமாபிவிருத்தி சம்பந்தமான நவீன நூல்களைப் படித்து வந்து அவர்கள் அடையும் ஞானத்தைக் கிராம ஜனங்களுக்கு உபதேசிக்கவும் வேண்டும்.

கிராமப் பஞ்சாயத்து சட்டமும், கூட்டுறவு சட்டமும் கிராமாபிவிருத்திக்கு இரண்டு நேத்திரங்களாக வாய்த்திருக்கின்றனவாதலால், கிராம ஜனங்கள் அவைகளின் கோட்பாடுகளை அநுஷ்டித்து வருவதிலும் அபிவிருத்தி ஞானத்தைப் பெறுகிறார்கள்.

கிராமங்களில் இருவகை ஜனங்கள் இருக்கிறார்கள்: பயிர் முயர்ச்சிகளிலிருக்கப் பட்ட பயிரூழியர்கள் ஒரு வகை, நிலங்களைச் சொந்தமாக வைத்துக் கொண்டு அவைகளில் தாங்கள் உழைக்காமலே பயிரூழியர்களைக் கொண்டு பயிர் செய்து வரும்படிகளை அடைகிற மிராசுதார்கள் மற்றொரு வகை. பயிரூழியர்கள் வருஷத்தில் சில மாதங்களில் பயிர் வேலையேயில்லாமல் இருக்கிறார்கள். மிராசுதார்கள் என்றைக்கும் ஒரு வேலையுமில்லாமல் சாப்பிட்டுக் கொண்டு வம்பளந்து கொண்டும், சீட்டாடிக் கொண்டும், வீண் வியாஜ்ஜியங்களை நடத்திக் கொண்டுமிருக்கிறார்கள். இரு வகை ஜனங்களும் கைநூற்பு, கைநெசவு முதலிய முயர்ச்சிகளை அநுஷ்டித்தால் கிராமம் ஒன்றுக்கு 2000 ரூபாய் பெறுமானதைக் வருஷந்தோறும் உற்பத்தியாகும். கிராமம் ஒன்றுக்கு 2000 ரூபாய் பெறுமான கதர் உற்பத்தியாகக் கூடுமானால் நம்முடைய

மாஹாண முழுமையிலும் எவ்வளவு கதர் உண்டாக்கப் படக்கூடு மென்று அறிந்து கொள்ளலாம். கிராமப் பள்ளிக்கூட உபாத்தியார்தான் இவ்வேலையை கிராம ஜனங்களுக்குக் கற்பிக்கக் கூடியவர். அவரும் அவருடைய மனைவியாரும் இவ்வேலைகளை நடத்தி வந்து கிராம ஜனங்களுக்கு போதனைகளைச் செய்யக் கூடும். அவர்கள் இன்னும் இதர தொழில்களையும் கிராமப் தொழிலாளிகளிடமிருந்து கற்று அவை சம்பந்தமான நவீன முறைகளை அறிந்து அனுஷ்டித்து கிராம ஜனங்களுக்கு உபதேசிக்கலாம்.

கிராமாபிவிருத்திக்கு கிராம உபாத்தியாயர்களின் ஊழியங்கள்தான் வெகு முக்கியமானவை. அவர்கள்தான் கிராம ஜனங்களைச் சரியான சமூக வாழ்வில் அமைக்கக் கூடியவர்கள். கிராமங்களில் வியவஸாயம், தொழில்கள் சுகாதார நிலை, பிரஜாக்ஷேமம் இவைகள் நன்றாய் அமைந்து ஜனங்கள் சந்தோஷமாய் வாழ்வதற்கு அவர்களின் ஊழியம் தான் முக்கியமானது.

## கிராம முன்னேற்ற சம்பந்தமாய் அவசரமாக கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்.

(கே. எஸ். வெங்கட்டரமணி எம். ஏ., பி. எல்.)

எல்லாத் துறைகளிலும் நன்றாய் முயர்ச்சி செய்கிற கிராம மொன்று இருக்கும் பக்ஷத்தில் அதை சுவர்க்க லோகத்திற்கு ஒப்பனை யென்று கூறலாம். நமது தேசத்தில் கிராமங்கள் பாழடைந்து கிடக்கின்றன. ஆனால் கிராம முன்னேற்ற உற்சாகம் எல்லா ஜனங்களாலும் வஹிக்கப் படுகிறது. கிராம முன்னேற்ற முயர்ச்சிகளும் பல விடங்களில் நடை பெறுகின்றன. ஆனபடியால், நம்முடைய கிராமங்கள் கொஞ்சகாலத்திற்குள் அபிவிருத்தி யடைந்து ஜனங்களின் க்ஷேமசெல்வ நிலைகளை உயர்த்தக் கூடு மென்று நாம் எதிர்பார்க்கலாம். கிராம முன்னேற்றத்தின் நிமித்தம் சில அவசர முயர்ச்சிகளும் ஏற்பாடுகளும் கைக்கொள்ளப் படவேண்டும். அவையாவன:—

கிராமங்களில் கிராம விஷயங்களை யெல்லாம் பரிபாலிக்க அதிகாரம் வஹிக்கிற திறமையுள்ள பஞ்சாயத்துகள் உடனே ஏற்பட வேண்டும். நவீன சாஸ்திரிய ஒழுங்குகளில் வியவஸாய முயர்ச்சிகள் நடை பெறுவதற்குச் சாதகங்கள் உண்டாக வேண்டும். பஞ்சாயத்துகள் பண்டசாலைகளை அமைத்து எரு, விதை கருவிகள் முதலியவைகளையும் உணவு, உடை சம்பந்தமான பொருள்களையும் அவைகளின் மூலமாய் கிராம ஜனங்களுக்கு



வரவழைத்துக் கொடுக்க வேண்டும். ஏற்றுமதி, இறக்கு மதி, வியாபாரம், முதலியவைகள் பஞ்சாயத்துகளின் அதிகாரத்திற் குட்பட்டு நடத்தப்பட வேண்டும். கிராமங்களிலுள்ள ஏரிகளும் குட்டைகளும் உபயோகப்படும் படியான நிலைகளில் அமைக்கப்பட வேண்டும். நீர்ப்பாசன சௌகரியங்கள் அதிகரிக்கப் பட வேண்டும். ஒவ்வொரு வயலுக்கும் பாய்கால், வடிகால்கள் ஏற்பட வேண்டும். கிராமங்களில் நதிகளிலும், குளங்களிலும் பலவிதமாக அசுத்தங்கள் உண்டாக்கப்படுவது கண்டிக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துகள் கிராமங்களில் விருக்ஷங்களை நட்டு உத்தியானங்களை உண்டாக்க வேண்டும். கிராமங்களில் வைத்தியர்களும், மருத்துவச்சிகளும் அமைக்கப்பட்டு ஜனங்களுக்கு வைத்திய சௌகரியங்கள் உண்டாக்கப்பட வேண்டும். கிராமக்கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டு அவைகளில் திறமையுள்ள நீதிபதிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் பஞ்சாயத்தார்களை ஜூரர்களாக வைத்துக்கொண்டு ஸிவில், கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்ய வேண்டும். பஞ்சாயத்துகள், பள்ளிக் கூடங்களையும், கிரந்த வாசகசாலைகளையும், வர்த்தமான பத்திரிகை வாசகசாலைகளையும் ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் ஸபாமண்டபங்கள் கட்டப்பட்டு அவைகளில் கிராமக் கூட்டங்களும், பஞ்சாயத்து மீடிங்குகளும் பஜனை, உபந்நியாஸங்கள் முதலியவைகளும் நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலிருந்து வசூலிக்கப் படும் வரித்தொகையில் பாதியைப் பஞ்சாயத்துகள் கிராம பரிபாலனத்திற்காக நிறுத்தி வைத்துக்கொள்ள அதிகாரத்தைப் பெறவேண்டும்.

## கிராம முன்னேற்ற முயர்ச்சிகள்

சென்ற அக்டோபர் மாதம் 16உ யன்று கரூரைச் சேர்ந்த தாந்தோணிமலையில் ஒரு கிராம முன்னேற்ற மஹாநாடு கூடிற்று. அம்மஹாநாட்டில் மீனம் பள்ளி ஜமீந்தார் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். அம்மஹா நாடானது பொலகலி ரெட்டிகள் அதிகமாயுள்ள குளித்தலை கரூர், திண்டுக்கல் தாலூக்காக்களின் மஹாநாடாயிருந்தது. அக்ராஸனாதிபதியாகிய ஸ்ரீமான் கே. வி. எம். வெங்கடாசல ரெட்டியார் அவர்கள் ஒரு வெகு உயர்வான உபந்நியாஸத்தைச் செய்தார். அவர் ஜனங்களின் கக்ஷி சண்டைகளைப் பற்றியும், அவர்கள் கல்யாணம் முதலிய பிரஸ்தாபங்களில் அதிகச் செலவுகளைச் செய்வதைப் பற்றியும், அவர்கள் கல்வி ருசியில்லாமலிருப்பதைப் பற்றியும் அவர்கள் அசுத்த வழக்கங்களை அப்பியஸிப்பதைப் பற்றியும், அவர்கள் மூடபக்தியை வஹித்துப் பல அநாகரிக வேலைகளைச் செய்வதைப் பற்றியும்

கண்டனஞ் செய்தார். இன்னும், அவர்கள் கிராம ஸ்தலங்களை அசுத்த ஸ்திதியில் வைப்பதால்தான் அவைகளில் நோய் மூலங்கள் ஏற்படுகின்றனவென்றும், நோய்களைத் தடுப்பதற்கு மாரியம்மன் கருப்பண்ண சாமி முதலிய தேவதைகளுக்கு ஆடுகளை வெட்டி பலி கொடுப்பது சரியான வழியல்லவென்றும், அவர்கள் சுத்தத்தை அநுஸரித்து வீடுகளிலும் தெருக்களிலும் ஆறுகளிலும், குட்டைகளிலும் அசுத்தங்கள் ஏற்படாமல் பாதுகாக்கவேண்டுமென்று அவர் வற்புறுத்திக் கூறினார். கிராம பஞ்சாயத்துகளின் அபிவிருத்தி நிமித்தமாகவும், கூட்டுறவு சங்கங்களின் அபிவிருத்தி நிமித்தமாகவும், ஆரம்பக்கல்வி வயது வந்தவர்களின் கல்வி இவைகளின் நிமித்தமாகவும், பல சிறந்த தீர்மானங்கள் கைக்கொள்ளப்பட்டன. கிராமஜனங்களிற்கு அபிவிருத்தி ருசியை உண்டாக்குவதற்கு கிராமங்களில் பிரயாணஞ்செய்து போதனைகளை நடத்துவதற்காக ஒரு பிரயாணப்பள்ளிக்கூட ஏற்பாடும் ஆலோசிக்கப்பட்டது. அப்பிரயாணப் பள்ளிக்கூடத்தில் போதனைகளை நடத்துவதற்கு ஜில்லா போர்டுகளிலிருந்து ஒரு சுகாதார இன்ஸ்பெக்டரையும், ஸ்கவுட் மாஸ்டரையும், உபாத்தியாயரையும், கூட்டுறவு விஷயங்களில் அநுபவமுள்ள ஒரு விவசாய நிபுணரையும் அடையவேண்டுமென்றும் ஆலோசிக்கப்பட்டது. பிரயாணப் பள்ளிக்கூடம் ஒவ்வொரு ஊரில் மூன்று மூன்று மாதங்கள் வரையில் போதனைகளை நடத்தி அங்கங்கே புத்தி கூர்மையுள்ளவர்களைப் பயிர்ச்சிசெய்து அவர்களை மற்ற கிராம ஜனங்களுக்கு போதித்து வழிகாட்டும் படிச் செய்ய வேண்டுமென்பதுதான் அவ்வேற்பாட்டின் நோக்கமாம். ஊக்கமுடன் போதனைகளையடையக்கூடிய புத்தி கூர்மையான நபர்கள் அகப்படுவது கஷ்டமான விஷயம். ஜெர்மனியில் ரெய்பெய்ஸன் தோன்றியதால்தான் அத்தேசத்தில் கூட்டுறவு இயக்கம் பரவிப்பயன் பட்டது. நம்முடைய தேசத்திலும் ரெய்பெய்ஸன் போன்ற தேசாபிமானிகள் தோன்றாமலிருப்பதால் தான் அவ்வியக்கம் இன்னும் தக்கப்படிப்பயன் படாமலிருக்கிறது. கிராம முன்னேற்றத்திற்கு கூட்டுறவுதான் முக்கியமான சாதனம். கிராமஜனங்களில் எல்லா வகுப்பினர்களும் ஒருவர்கூடத்தவராமல் கூட்டுறவினர்களாகி கூட்டுறவின் நன்மைகளைப் பெற்றுப் பணங்களைச் சேமித்துக் கொண்டு டிபாசிட்டுகளை கூட்டுறவு ஸ்தாபனங்களில் போட்டு வைக்கவேண்டும். மேற் கூறியவாறு ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் ஒரு புகழத்தக்க உபந்நியாஸத்தைச் செய்தார். மாஹநாட்டில் வந்திருந்த கிராம ஜனங்களில் 100-ல் 5-பேர்களாவது அவரது உபதேசங்களைக் கைப் பிடிப்பார்களாகில் கிராம முன்னேற்ற முயர்ச்சிகள் பயன் படாமல் போகாது.



# சியாமள சிங்கு.

## குஜராத்தைப் பற்றிய ஓர் கதை.

(டி. வி. சுவாமிநாத ஐயர்)

நமது பரதகண்டத்தில் முற்காலத்தில் 56 உள் நாடுகளிருந்தனவென்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்களல்லவா? அவ்வைம்பத்தாறு நாடுகளும் தனித்தனி அரச வம்சங்களால் ஆளப்பட்டு வெகு காலம் வரையில் சிறப்பாய் வாழ்ந்து வந்தன. மேற்கு ஆசியாவில் இஸ்லாம் மதம் நன்றாய்ப் பரவி வலுக்கிற வரையில் இந்தியாவிற்கு அந்நிய தேசத்தவர்களால், அதிக உபத்திரவங்கள் ஏற்படவில்லை; இந்திய உள் நாடுகள் அந்நிய தேசத்தவர்களின் படையெடுப்பு பயமில்லாமலே இருந்து வந்தன. ஆயினும், அந் நாடுகள் ஒன்றோடொன்று ஒத்துமை பாராட்டாமல் போர் புரிந்து வந்தன.

கி. பி 13-ம் நூற்றாண்டில் குஜராத்தும், மாளவமும், செல்வத்திலும், போர் பலத்திலும் வெகு உயர்வாகவிருந்தன. குஜராத்து தேசத்தில் மண்டலேசுவர ருத்திரதேவ் என்ற வெகு கீர்த்தி பெற்ற அரசன் அரசாண்டு வந்தான். அவன் புத்தியிலும், கல்வியிலும், பராக்கிரமத்திலும் வெகு சிறந்தவனாயிருந்தான். அவனுடைய பிரஜைகளும் சத்தியம், நீதி, நெறி, தர்மம், முதலியவைகளை யநுஷ்டித்துக் கொண்டும் மதுபானம், முதலிய கெட்ட வழக்கங்களை அநுஸரிக்காமலும், தேவ பக்தியுடனும், பரோபகார மனதோடும் வாழ்ந்தார்கள். குஜராத்தில் மழை தவறாமல் பெய்தது; பயிர்கள் நன்றாய் விளைந்தன. கொடிய நோய்களை உண்டாகவில்லை. அரசனும், பிரஜைகளும் ஒத்துமையுடன் வெகு சந்தோஷமாக வாழ்ந்தார்கள். மாளவத்திலோ, சுபத்திரவர்மன் என்ற ஓர் கொடிய அரசன் அரசாண்டு வந்தான். அவன் தந்திரமார்க்கத்திலேயே புத்தியைப் பிரயோகித்து வந்தான். சத்தியம், தர்மம் முதலியவைகளை அவ்வரசன் சரிவர அநுஷ்டித்து வராமலிருந்தான் ஆனபடியால், அத்தேசத்தில், பிரமுகர்களும், பிரஜைகளும் நல்ல வழக்கங்களை விட்டு விட்டு, கெட்ட வழக்கங்களை அநுஸரித்தார்கள். மாளவத்தில் மதுபான வழக்கம் அதிகரித்தது. ஸ்திரீகளும், விபசாரத்தில் தோஷமேயில்லையென்கிற மனப்பாங்கை வஹித்தார்கள்.

குஜராத்து தேசம் மாளவத்தை அடக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டது. மண்டலேசுவர ருத்திரதேவ் அவ்விஷயமாய், தன்னுடைய போர்த்தலைவனாகிய இராமேஷ்வர் சிங்கோடு ஆலோசித்து வந்தான். மாளவத்தின் போர் பலம் குஜராத்தினுடையதைவிட வெகு குறைவாகவிருந்தபடியால் சுபத்திரவர்மன் இச்செய்தியைக் கேள்விப்பட்டு மனக்கலக்கத்தை அடைந்தான்.

ஆயினும், அவன் தன்னுடைய தந்திர சாமர்த்தியத்தை யெல்லாம் குஜராத்து இராஜாங்கத்தோடு உபயோகித்துப் பார்த்து அதன் எண்ணத்தை மாற்ற எத்தனித்தான். ஆனால், அவனுடைய தந்திர சாமர்த்தியம் பயன் படவில்லை. இராமேஷ்வர் சிங்கை மாளவத்தின் மீது படை யெடுக்க வேண்டிய நிமித்தம் ஏற்பாடுகளைக்கைக் கொள்ளும்படி மண்டலேசுவரன் உத்திர விட்டான். இராமேஷ்வர் சிங்கு அதிவிரைவில் ஏற்பாடுகளைச் செய்து வந்தான். நாளாவில் மாளவத்திற்கு சைந்நியம் செல்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் தயாராகி விட்டன. இப்படி இருக்கையில் குஜராத்தைச் சேர்ந்த சுற்று பக்கப் பிரதேசங்களில் ஆப்கன் கொள்ளைக் கூட்டம் ஒன்று புகுந்து ஜனங்களைக் கொள்ளை அடிக்க தென்று ஒரு செய்தி மண்டலேசுவரனுக்கு எட்டிற்று. பிரஜா ஸம்ரக்ஷணத்தையே முக்கிய வேலையாகக் கொண்டிருந்த மஹாராஜா மண்டலேசுவர ருத்திரதேவ் சேனைபதியாகிய இராமேஷ்வர் சிங்கை மாளவப் படை யெடுப்பு முயற்சிகளைச் சற்று நிறுத்தி வைக்கும் படிக்கும், சைந்நியங்களுடன் கொள்ளைப் பிரதேசத்திற்குப் போய் கொள்ளைக்காரர்களை அடக்கிக் கைதி செய்து வரும்படிக்கும் உத்திர விட்டான். சேனைபதி இராமேஷ்வர் சிங்கு உடனே ஸைந்நியத்துடன் கொள்ளைப் பிரதேசத்திற்குப் புறப்பட்டுப்போய் ஆப்கன் கொள்ளைக் கூட்டத்தைத் தாக்கித் தோல்வியடித்து, இறந்தவர் போக மீதிப்பேர்களைக் கைதி செய்து, அவர்களை அரசனின் முன்னிலையில் கொண்டு வந்து ஆஜர் படுத்தினான். அரசன் அவர்களை அடிமைகளாகச் செய்து அரண்மனையில் பலவித கனத் தொழில்களைச் செய்யும்படி அமைத்தான். கொஞ்சகாலம் வரையில் மாளவதேசப் படையெடுப்பு நினைவே அரசனின் மனதில் இல்லாமலிருந்தது. சேனைபதியும், பிரமுக உத்தியோகஸ்தர்களும் கூட ஆப்கனியர்களைத் தோற்கடித்த விஷயத்தில் அதிக சந்தோஷத்தை யடைந்து அவ்வித நினைவே யில்லாம லிருந்தார்கள்.

மாளவத்தில் மாத்திரம் சுபத்ரவர்மனும், அவனுடைய மந்திரிமார்களும், குஜராத்து அரசன், தங்கள் மீது கட்டாயம் படை யெடுத்து வருவானென்ற எண்ணத்துடனேயே இருந்தார்கள். அவர்கள் குஜராத்தின் போர்பலக் குறைவுகளை கண்டறிந்து கொள்ள வேண்டு மென்று நோக்கங் கொண்டு, அந்த தேசத்திற்கு யாரையாவது தக்க நபரை மாறுவேஷம் போட்டு அனுப்பி, அவனை அவ்விவரங்களை அறிந்து வரும்படிச் சொல்ல வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டார்கள். இவ்வித வேலைக்குத் தக்க நபர் ஒருவரும் அகப்பட வில்லையாதலால், அரசன், தன்னுடைய குமாரியாகிய மாயாவதியைச் செல்லும்படி உத்திர விட்டான். மாயாவதி என்பவள் வெகு அழகிய 18 வயதான பெண்ணாயிருந்தாள். அவளும் அரசனைப் போலவே தந்திர புத்தி



யில் சிறந்தவளா யிருந்தாள். யாவரையும் மயக்கி வசப்படுத்திக் கொள்கிற சக்தியை யுடையவளாகவுமிருந்தாள். மதுபானம், நர்டத்தை முதலியவைகளில் ருசியையும் உடைத்தாயிருந்தாள். சுபத்ரவர்மன் உத்திரவிட்ட வுடனே மாயாவதி; வெகு சந்தோஷத்துடன் குஜராத்து தேசத்திற்கு புறப்பட்டாள். அவள் ஒரு தாசியைப் போல் வேஷம் போட்டுக்கொண்டும் உயர்ந்த ஆடைகளையும், ஆபரணங்களையும், அணிந்து கொண்டும், சங்கீத வாத்தியங்களை யெடுத்துக் கொண்டும் புறப்பட்டுச் சென்றாள். குஜராத்தை அடைந்ததும், மண்டலேசுவரனின் அரண்மனை வாயிலுக்குச் சென்று, அவ்வரசனின் குணங்களையும், வீரியத்தையும், பெருமையையும், பற்றிப் புகழ்ந்து, குயில் குரல் போன்ற குரலோடு இனிய பாட்டுகளைப் பாடினாள். அரண்மனையில் சபாமண்டபத்தில், இராஜ்ஜிய வியவஹார வேலைகளைப் பைஸல் செய்து கொண்டிருந்த அரசனும், சேனைபதியும் பிரமுக உத்தியோகஸ்தர்களும் பாட்டைக் கவனித்துக் கேட்டு ஆனந்த மடைந்தவர்களாய் வெளியே வந்து மாயாவதியைப் பார்த்தார்கள். மாயாவதி வெகு நேர்த்தியாய் அலங்கரித்துக் கொண்டு புன் சிறிப்புடன் நாட்டிய மாடிக் காணஞ்செய்து கொண்டிருந்தாள். அவளுடைய ரூபமும், பாட்டும், அபிநயமும், புன்சிறிப்பும், அரசனின் மனதை, மோஹித்தன. உடனே அரசன், அவளைத் தன்னுடைய அந்தப்புரத்திற்கு வரவழைத்துக் கொண்டு அவளைத் தனக்குத் தோன்றிய பொழுதெல்லாம் நாட்டியமாடிப் பாடும்படி உத்திர விட்டு வந்தான்.

மாயாவதியின் சந்தோஷம் எல்லைகடந்தது. அவளுடைய எண்ணங்கள் பூர்த்தியாவதற்குச் சரியான வழியேற்பட்டதைப் பற்றி அவள் நினைத்து, நினைத்துச் சந்தோஷப் பட்டாள். அவள் அரண்மனைக்குள் வந்த உடனேயே அரசன் அவளை நாட்டியமாடிப் பாடும்படி உத்திரவிட்டான். உடனே மயாவதியானவள் தன்னுடைய சாமர்த்தியங்களை யெல்லாம் காட்டி சிருங்கார ரஸத்தில் நாட்டியமாடிப் பாடி அரசனின் மனதை மயக்கினாள். அரசன் அவளிடத்தில் காதல் கொண்டு அவளைவிட்டுப் பிரியாமலேயிருந்து வந்தான். சில நாள்களை அரசன் இவ்வித மயக்கத்தில் கழிக்கவே, அரசாங்க வேலைகள் சரிவர நடக்க வில்லை. ஆனது பற்றி மண்டலேசுவர ருத்திர தேவன், ஒவ்வொரு தினத்திலும், இராக்காலத்தில் மாத்திரம் மாயாவதியோடிருக்கத் தொடங்கினான். மாயாவதி அரண்மனையை அடைந்து கிட்டத்தட்ட ஒரு மாதமாகி விட்டபடியால், அவள் குஜராத்தின் போர்பல விவரங்களையும், அரசாங்கத்திலுள்ள சண்டைசச்சரவுகளையும் பல வழிகளால் அறிந்து கொண்டாள். அவள், தாஸி குணங்களைக் கைக்கொண்டிருந்தபடியால், பல பெயர்களை நேசித்துக் கைவசப்படுத்திக் கொண்டாள். அவர்களுள், சேனைபதியின்

குமாரனாகிய, விசேஷ புத்தியும் பராக்கிரமுமுள்ள ரெய்மல் ஒருவனாயிருந்தான். மாயாவதி, அவனை மயக்கிக் கைவசப்படுத்தி, அவனிடமிருந்து குஜராத்து சம்பந்தமாய் இன்னும் பலவித சமாசாரங்களைத் தெரிந்து கொண்டு, அவனை அழைத்துக்கொண்டு ஒருவர் கண்ணிலும் அகப்படாமலே, மாளவத்திற்குச் செல்ல எத்தனித்தாள். தான் புறப்படுவதற்கு முன்னமே, குஜராத்தில் அடிமைப் படுத்தப்பட்டு அடிமை வேலையைச் செய்து வந்த ஆப்கன் ஒருவனையும் வசப்படுத்திக் கொண்டு, அவன் மூலமாக, விவரங்களடங்கிய ஒரு கடிதத்தைத் தன் தகப்பனுக்கு எழுதி யனுப்பினாள்.

மாயாவதியும் ரெய்மலும் ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டுப் போன செய்தி மண்டலேசுவா ருத்திர தேவிற்கு எவ்விதமாகவோ எட்டிற்று. சேனாபதி, இராமேஷ்வர் சிங்கும், இச்செய்தியைத் தெரிந்து கொண்டான். இருவருக்கும் வெகு கோபம் வந்து விட்டது. இருவருக்கும், ரெய்மல் எதிரிகளோடு கலந்து கொண்டு குஜராத்திற்கு அபஜயத்தை விளைப்பானென்றே தோன்றியது. ஆனது பற்றி மஹாராஜா மண்டலேசுவரன் சியாமள சிங்கு என்கிற வீரனை அனுப்பி அவர்களைத் தேடிப்பிடித்துக் கொண்டு வரும்படி உத்திரவிட்டான். சியாமள சிங்கு என்பவன் சகல உயர் குணங்களையும் வஹித்த க்ஷத்திரிய வீரன். அவன் குஜராத்தை விட்டுப் புறப்பட்டு மாளவ தேச மார்க்கமாய்ச் செல்லுகையில், படான் தேசத்தின் அரசனது அரண்மனை வழியாய்ச் செல்ல வேண்டியிருந்தது. படான் தேசத்து அரசனாகிய சங்கர நாராயணதேவும் மாளவ தேசத்தின் மீது பகை பாராட்டி வந்தான். அவன் பெண்ணாகிய இந்துமதியானவள், சியாமள சிங்கை அரண்மனையிலிருந்து பார்த்து, அவனிடத்தில் காதல் கொண்டு, அவனைப் பின் தொடர்ந்தாள். சியாமளசிங்கு ரெய்மலையும், மாயாவதியையும், வழியில், ஒரு சத்திரத்தில் சந்தித்து, படான் தேசத்து அரசனுடைய ஒத்தாசையால், அவர்களைப் பிடித்துக் கொண்டு குஜராத்துக்குத் திரும்பிப் போனான். போகும் பொழுது, இந்துமதியை, படான் அரண்மனையில் விட்டு விட்டு, அவளுடைய உத்திரவைப் பெற்றுக் கொண்டு ரெய்மலுடனும், மாயாவதியுடனும் குஜராத்துக்கு போனான்.

குஜராத்தை அடைந்து, சியாமள சிங்கு ரெய்மலையும், மாயாவதியையும் அரசனின் சபாமண்டபத்திற்கு நடத்தி, அதன் மத்தியில், நிறுத்தினான். அப்பொழுது மஹாராஜா மண்டலேசுவர பூபதியும், சேனாபதி இராமேஷ்வர் சிங்கும், இதர பிரமுகர்களும் ஸபாமண்டபத்தில் ஆஜராயிருந்தார்கள். அரசன் வெகு கோபத்துடன் தண்டனைகளை விதித்தான். ரெய்மலின் வலது கை அவனுடைய தகப்பனாகிய சேனாபதி இராமேஷ்வர் சிங்கினால் பட்டாக்கத்தியால் வெட்டப்பட வேண்டும் என்று உத்திரவிட்டான். இராமேஷ்வர்



சிங்கு தன்னுடைய குமாரனுக்கு இவ்விதக் கடுந்தண்டனையைத் தானே நடத்த வேண்டியதா யிருப்பதைப் பற்றி துயரப்பட்டுக் கண்ணீர் சொரிந்தான். ஆனபோதிலும், அவன் க்ஷத்திரியனாதலால், அந்த தண்டனை ரெய்மலின் குற்றத்திற்கேற்ற தண்டனை யென்றே கருதி, குற்றங்களின் நிமித்தம் தண்டனை விதிப்பதிலும், நடத்துவதிலும், தகப்பன், பிள்ளை என்கிற உறவு ஆலோசிக்கத் தக்கதல்ல வென்று சொல்லிக் கொண்டு, தன் குமாரனைக் கையை நீட்டச் சொல்லி, கத்தியை ஓங்கி வீசி, அதை வெட்டி எறிந்தான். பிறகு ரெய்மல் சிறையில் வைக்கப்பட்டான். அரசன், மாயாவதிக்கும் சரீரத்தில் சூடுபோட்டு வைத்து அழகு குறையும்படிச் செய்து, சியாமளசிங்கைக் கூப்பிட்டு, அவளை மாளவதேச அரசனிடம் கொண்டு போய் ஒப்புவிக்கும்படிக் கட்டளையிட்டான். அரசன் மாயாவதிக்குத் தண்டனையை விதித்து நடத்திய பிறகு அவளை ரெய்மலோடு சிறையில் வைத்திருந்தான். மாயாவதியும், ரெய்மலும் சிறைவாஸத்தில் கலந்து யோசனை செய்து கொண்டார்கள். சியாமளசிங்கு மாயாவதியை அழைத்துக் கொண்டு மாளவத்தை நோக்கிப் புறப்பட்ட பிறகு ரெய்மலும் வெளிக்கிளம்பி மாளவத்தை யடைய வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள். சியாமளசிங்கு, மாயாவதியை அழைத்துக் கொண்டு மாளவ தேசத்திற்குப் புறப்பட்டுப் போனான். போகிற வழியில் படானிற்குச் சென்று, இந்துமதியையும் கூட்டிக் கொண்டு போனான். மாளவத்தை அவன் அடையுமுன் ரெய்மல் சிறையிலிருந்து வெளிக்கிளம்பி அவ்விடம் வந்து சேர்ந்திருந்தான்.

ரெய்மல்லினால் சுபத்ரவர்மனுக்கு நடந்த விஷயங்களெல்லாம் ஏற்கனவே விவரிக்கப்பட்டிருந்தன. சுபத்ரவர்மன் தன் குமாரியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் சியாமள சிங்கும், இந்துமதியும், மாயாவதியும் வந்து சேர்ந்தார்கள். சுபத்ரவர்மன், தன் குமாரியின் அலங்கோலங்களைக் கண்டுக் கடுஞ்சினங்கொண்டு, குஜராத்தின்மீது படையெடுத்துச்செல்ல தீர்மானித்தான். உடனே, தாமதமில்லாமல் தன்னுடைய சைந்நியங்களை குஜராத்திற்கு அனுப்பினான். சைந்நியங்கள் புறப்பட்டுப் போனவுடனே சுபத்ரவர்மன் சியாமள சிங்கிற்குத் தீங்கு செய்யத் தொடங்கினான். தூதனாக வந்தவனுக்கு யாதொரு தீங்கும் செய்யக்கூடாதென்ற தர்மத்தை சியாமளசிங்கு எடுத்துச்சொல்லி முறையிட்டுக் கொண்ட போதிலும் சுபத்ரவர்மன் அவனுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடாமலே தன்னுடைய படர்களைக் கூப்பிட்டு அவர்களை சியாமள சிங்கின் கண்களைக் குத்தி அவனைக் குருடனாக்கும்படி உத்திரவு பண்ணினான். படர்கள் அரசனுடைய உத்திரவை நடத்தினார்கள். சியாமள சிங்கையும், இந்துமதியையும் சுபத்ர

வர்மன் மாளவத்தை விட்டுச் செல்லும்படிக்கும் அவர்களைத்தான் குஜராத்தின்மீது படையெடுத்து வருகிற செய்தியை மண்டலேசுவரனுக்கு அறிவிக்கும்படிக்கும் உத்திரவிட்டான். சியாமள சிங்கும் இந்துமதியும் குஜராத்திற்குத் திரும்பி வருவதற்குப் பிரயாணப் பட்டார்கள். சியாமள சிங்கு அந்தகனாய் விட்ட படியால் இந்துமதி அவனைக்கைபிடித்து நடத்திக் கொண்டுபோனாள். பிரயாணம் வெகு கஷ்டமாயிருந்தது. அவர்கள் களைப்புடனும், உணவில்லாமலும் பலநாட்கள் நடந்த பின்பு படான் தேசத்தின் எல்லையை அடைந்தார்கள். படான் தேசத்தின் எல்லை வந்தவுடனே, இந்துமதி, ஒரு கிராம உத்தியோகஸ்தனைக்கூப்பிட்டு அவனைத் தன்னுடைய தகப்பனிடத்தில் போய் சங்கதிகளைச் சொல்லித் தெரிவிக்கும்படி உத்திரவிட்டாள். உத்தியோகஸ்தன் போய் தெரிவித்தவுடனே, மஹாராஜா சங்கர் நாராயண தேவ் அவர்கள் வந்து சேர்ந்திருந்த ஸ்தலத்திற்கு வெகு துரிதமாய் வந்து சேர்ந்தான். இந்துமதி மாளவஅரசன் சியாமள சிங்கிற்கு நடத்திய தீங்கை தன் தகப்பனுக்கு விவரித்தாள். மேலும், சுபத்ரவர்மன் படைகளைக் குஜராத்திற்கு அனுப்பியிருக்கிற செய்தியையும், அவனும் புறப்பட்டு வருகிறானென்கிற செய்தியையும் தெரிவித்தாள். சங்கரநாராயணதேவ், சியாமள சிங்கிற்கும் இந்துமதிக்கும் பிரயாண சௌகரியங்களை யெல்லாம் கொடுத்து, அவர்களை குஜராத்திற்கு முன்னதாக அனுப்பி விட்டுத் தன்னுடைய சைன்னியங்களுடன் மாளவ ஸைன்னியத்தைத் தொடர்ந்து கொண்டு சென்றான். சியாமள சிங்கும் இந்துமதியும் குஜராத்தை யடைந்து, நடந்த விஷயங்களை மண்டலேசுவரனுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே மாளவ சைந்நியம் மண்டலேசுவரனுடைய அரண்மனைக்கு அருகில் வந்து இறங்கி விட்டது. உடனே அவைகள் பீரங்கிகளை அரண்மனையின் மீது பிரயோகிக்க ஆரம்பித்தன. மண்டலேசுவரனும் அவனுடைய சேனாபதியும் பின்வாங்கவில்லை. குஜராத்தின் ஸைந்நியங்கள் மாளவ ஸைன்னியத்தை எதிர்த்துச் சண்டையிட்டன. பீரங்கிகளும் பிரயோகிக்கப்பட்டன. ஆரம்பத்தில் குஜராத்து தான் ஜெயமடையும் போல் காணப்பட்டது. மத்தியில் மாளவர்கள் வெகு தீவிரமாய்த் தாக்கவே அவர்கள்தான் ஜெயிப்பார்கள் போல் தோன்றியது. ஆனால், படான் தேச சைந்நியம் மாளவ சைந்நியத்தை பின்பக்கமாய்த் தாக்கிய படியால் கடைசியில் குஜராத்துக்கே ஜெயமுண்டாயிற்று. மாளவ ஸைந்நியத்தில் மாண்டு போனவர்கள் போகமீந்தவர்கள் நூறு பெயர்கள் கூட இல்லையாம். குஜராத்து தேச மன்னன் அவர்களைக் காப்பாற்றி, அவர்களைத்தன் அரண்மனைக்குள் அழைத்துக் கொண்டு போய்ச் சிலநாட்கள் வரையில் வைத்துக் கொண்டிருந்தான். பிழைத்திருந்தவர்களுள் யாயாவதியும் ரெய்மல்லும் இருந்தார்கள். ரெய்மல்லை சியாமள சிங்கு பார்த்ததும் அவனைத்;



தாக்கினான். ரெய்மல்லும் சிறந்த வீரனாக விருந்தபடியால் அவனும் சியாமள சிங்கைச்சரியாய் எதிர்த்துச் சண்டையிட்டான். ஆனபோதிலும், கடைசியில் சியாமள சிங்குதான் ஜெயித்தான். ரெய்மல் சண்டையில் இறந்தான்.

மண்டலேசுவர ருத்ரதேவன், ஒரு தர்பாரை நடத்தினான். அதில் சங்கர நாராயண தேவனும், குஜராத்து தேச சேனைத்தலைவர்களும், வீரர்களும், பிரமுகர்களும், படான்தேச வீரர்களும், மாளவ சைந்நியத்தில் சண்டையில் மாண்டவர்கள் போக மீதிப்பெயர்களும் ஆஜரானார்கள். மண்டலேசுவரனும், சங்கரநாராயண தேவனும், சியாமளசிங்கின் உயர்வான உணர்ச்சிகளையும், தேசபக்தியையும், பராக்கிரமத்தையும் பற்றிப் புகழ்ந்து பேசினான். சங்கர நாராயணனும் அவ்வாறே பேசினான். உடனே படான் தேசத்து இராஜ குமாரியாகிய இந்துமதி புன்சிரிப்புடன் முன் வந்து சியாமள சிங்கின் கழுத்தில் ஒரு பூமாலையைப் போட்டாள். உடனே சியாமளசிங்கின் நேத்திரங்களும் முன் போலாகி பார்வை சக்தியை அடைந்தன. சியாமளசிங்கிற்கும், இந்துமதிக்கும் கல்யாணம் வெகு சிறப்பாக நடந்தது.

## வர்த்தமானக்குறிப்பு.

இராஜப் பிரதிநிதியவர்களும், லேடி இர்வின் அவர்களும், நமது மாஹாணத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்தார்கள். அவர்களுக்கு எல்லாப் பட்டணங்களிலும் பிரஜைகள வெகு பக்திப் பரீதிகளுடன் நன்கு வரவளித்து உபசாணைகளைச் செய்தார்கள். இர்வின் பிரபுவானவர் நமது தேசத்திற்கு வந்த இராஜப்பிரதிநிதிகளுள் வெகு சிறந்தவர். அவர், நம்முடைய தேசம், பலவழிகளிலும் முன்னேற்றமடைந்து, நம்முடைய ஜனங்கள் சுகத்திலும், செல்வத்திலும் உயர வேண்டு மென்று விடாமுயர்ச்சியைக் கைக்கொண்டு, உழைத்து வருகிறார். வியவஸாய முன்னேற்றத்தின் நிமித்தமாக அவர் இணையற்ற வேலைகளைச் செய்திருக்கிறார். இந்திய ஸமூக ஒற்றுமை விஷயமாகவும் ஜனங்களிற்கு நற்புத்தியைப் போதித்து வருகிறார். இந்திய ஜனங்களின் விவேக அபிவிருத்தியிலும், ஆசார சீர்திருத்த வழிகளிலும் ருசியை வஹித்து வருகிறார். இவ்விதமாக நம்முடைய க்ஷேமத்திற்கு உழைப்பதையே தன்னுடைய வேலையாகக் கொண்டிருக்கிற பிரபுவிற்குத் தீங்கு செய்ய எத்தனித்தவர்களுக்குச் சரியான தண்டனை விதிக்கப்பட்டாலொழிய நம்முடைய தமிழ் நாட்டினர்களுக்கு மனதில் அமைதி ஏற்படாது. இர்வின் பிரபுவின் சுற்றுப் பிரயாணம் முடிந்து அவர் பிரயாணஞ் செய்து ரெயில் வண்டி டெல்லியை ஸமீபித்த சமயத்தில் வண்டிக்கு வெடி குண்டு வைக்கப்பட்டு அது வெடித்ததாம். மஹாத்மா காந்தி யவர்களும் இவ்விபத்தைப் பற்றி வெகு விஸன மடைந்து அதைக் கண்டனஞ் செய்தார் காங்கிரஸிலும் இது விஷயமாக ஒரு தீர்

199390

மானம் கைக்கொள்ளப் பட்டது. நமது இராஜப் பிரதிநிதியாகிய இர்வின் பிரபுவும், அவர் மனைவியாரும், தீர்க்காயுளை வஹிக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய வருஷ ஆரம்பத்தில் மாக்ஷிமை தங்கிய நமது சக்கிரவர்த்தியவர்கள், சிறந்த உத்தியோகஸ்தர்களுக்கும், பிரமுகர்களுக்கும், பட்டங்களை அளிக்கையில், நமது மாஹாணத் தலைவர்களுள் சிறந்தவராகவும், தேசமுன்னேற்றத்திற்காக இணையற்ற முயர்ச்சிகளைக் கைக்கொண்டு வருகிறவருமான ராவ்பஹதூர் பி. முனிசாமி நாயுடுகாரு, எம். எல். ஸீ அவர்களுக்கு "திவான் பஹதூர்" பட்டத்தை கொடுத்தாரென்பது, நமது மாஹாண ஜனங்களனைவர்க்கும் வெகு சந்தோஷத்தைக் கொடுக்கத் தக்கது. திவான் பஹதூர் பி. முனிசாமி நாயுடுகாரு நமது மாஹாண பாரெஸ்டு பஞ்சாயத்து ஸங்கத்தின் தலைவராகவும், பார்ப்பனரல்லாதவர்களின் முன்னேற்ற இயக்கத்தின் தலைவராகவுமிருக்கிறார். திவான் பஹதூர் நாயுடுகாரு பல்லாண்டு பல்லாண்டுகளாய் வாழ்வாராக.

தென்னாட்டில் நாகஸ்வர வாத்தியத்தை வாசிப்பதில் சிறந்த வித்துவானாகப் புகழ் பெற்ற மதுரைப் பொன்னுசாமி பிள்ளை சிலநாள்களுக்கு முன்பு இறந்து விட்டார்.

சிப்பன்ஹாமில் ஒரு குதிரைத் தன் எஜமானனின் குழந்தையைத் தினந்தோறும் கை வண்டியில் வைத்து உலாத்தி வருகின்றதாம்.

பர்மிங்ஹாமிலுள்ள பிச்சைக்காரர்கள் தங்கள் க்ஷேமாபிவிருத்தியின் நிமித்தம் ஒரு பத்திரிகையை நடத்தி வருகிறார்களாம்.

குளிர் தேசங்களில் ஜனங்களுக்குச் செவிட்டுத்தனம் அதிகமாக உண்டாகிறதாம்.

பூமியின் பரப்பில் ஒரு பங்கு காடுகளென்று கணக்கிடப் பட்டதாம்.

நம்முடைய தேசத்தில் சாகுபடி செய்யக் கூடிய நிலங்களின் மொத்த விஸ்தீர்ணம் 60 கோடி சதுரமைல்களென்றும், அவ் விஸ்தீர்ணத்தில் 25 கோடி சதுரமைல்கள்தான் சாகுபடி செய்யப்படுகின்றனவென்றும் கணக்கிடப் பட்டிருக்கிறது.

சுதர்வஸ்திரங்கள் சப்தத்தை உறியும் சக்தியை வஹிக்கின்றனவென்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.

ஐக்கிய மாகாண ஜமீந்தார்கள் தங்களுடைய கிராமங்களைச் சீர்படுத்தி அபிவிருத்தியைச்செய்யத் தொடங்கியிருக்கிறார்களாம். தமிழ் நாட்டிலும் பிரபலமான ஜமீந்தார்களும், மிராசுதார்களும் இம்மாதிரியே வேலை செய்யவேண்டுமென்றெடுத்துச்சொல்வோம். தங்களுடைய கிராமங்கள் குப்பைமேடுகளாக



வும் நோய் மூலங்களோடுமிருந்தால் பயிர்வேலைக்கு வேண்டியகிராமஜனங்கள் எப்படி நோயில்லாமலும் பலமுடனுமிருப்பார்கள்? வியவஸாய முயர்ச்சிகளை அவர்கள் எப்படித் தக்கபடி செய்யக்கூடும்?

சென்ற மாதம் 13உயன்று கவர்மெண்டின் அநுமதியின் பேரில் சென்னையில் மாஹாண நில அடமான பாங்கு ஏற்படுத்தப் பட்டது.

சித்தூர் ஜில்லாவைச் சார்ந்த கவுதவரம் கிராமத்தில் ஆண்பிள்ளையாகப் பிறந்து வளர்ந்த ஜடலநாடு, சிலவருஷங்களாக பெண் உருவத்தையடைந்து, பெண் அங்கங்களைப் பெற்று பெண்ணாக மாறியிருக்கிறான். அவனுக்கு ஸ்தனங்கள் உண்டாயிருக்கின்றனவாம். ஆண்குறியுப்போய் பெண்குறி ஏற்பட்டிருக்கிறதாம். அவன் ஆண்பிள்ளையாக விருக்கும்பொழுது இரண்டு இருளப்பெண்களோடு ஸம்போகம் செய்திருக்கிறானும். அவன் பெண்ணாக மாறிய பின்பு, கர்ப்பம் தரித்தானும். இவ்வாச்சரியச்செய்தியை புத்தூர் டிப்டி தாசில்தார் சென்ற டிசம்பர்மாதம் 14உயுள்ள ஹிந்துப்பத்திரிகையில் விளம்பரம் செய்தார். பிறகு ஹிந்துபத்திரிகை நிருபர் அவ்வூருக்குப் போய் ஜடலநாடுவின் அங்கங்களைப் பரிசோதித்துப் பார்த்தார். டிப்டிதாசில்தாரின் ரிபோர்டை அவர் உறுதிப்படுத்தினார். சாஸ்திர நிபுணர்கள் மேற்கொண்ட விசாரணைகளைச் செய்யத் தொடங்கியிருக்கிறார்களாம்.

இந்திய வியவஸாயிகளின் வியவஸாயக் கடன்களின் மொத்தம் 674 கோடி ரூபாய்களாக விருக்கிறது. வியவஸாயிகள் எப்பொழுதும் கடன்களோடிருக்கிறார்கள். வருஷம் ஒன்றுக்கு 60 இலிருந்து 500 வீதம் வட்டிகளைக் கொடுக்கிறார்கள். நிலவரி மொத்தத்தைப்போல் மூன்று மடங்கு திரவியம் பிரதி வருஷமும் வட்டி கொடுப்பதில் செலவாகி விடுகிறது. நிலவரி மொத்தமானது வியவஸாய வருமபடியில் ஐந்தில் ஒரு பாகமாகவிருக்கிறது. ஆகவே வட்டித்தொகைக்காகவும் நில வரிக்காகவும் நில வரும்படியில் 5 இல் நான்கு பாகங்கள் செலவாகி விடுகின்றன. மீதி ஒரு பாகம் வியவஸாயிகளின் யோக க்ஷேம செலவுகளுக்கே போதாமல் போகின்றது. ஆகவே அவர்களுக்கு எரு, விதை, கருவி முதலியவைகளை வாங்குவதற்கும், நிலங்களைச் சீர்படுத்துவதற்கும் பணமே கிடையாது. அவர்கள் கடன் வாங்க வேண்டியதாக ஏற்படுகிறது. கடன் கொடுப்பவர்கள் வியவஸாயிகளின் அவஸரநிலையைப் பார்த்து அதிக வட்டியை விதிக்கிறார்கள். வியவஸாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன்களை நீண்டகால கெடுக்களின் பேரில் கொடுக்க பாங்குகள் ஏற்படப்போகின்றனவென்பதைப் பற்றி நாம் நிறம்ப சந்தோஷமடைகிறோம்.

வங்காளத்திலும், பஞ்சாபிலும், ஐக்கிய மாஹாணங்களிலும் வியவஸாயிகளில் பெரும்பாலர் முகமதியர்களாம். கடன் கொடுக்கிற ஸாவுகார்கள் ஹிந்துக்களாம்- ஹிந்து ஸாவுகார்கள் அதிக வட்டிகளை விதித்து முஸ்லீம்

களைத் தொந்திரவு செய்வதாலேயே ஸமூகச்சண்டைகள் ஏற்படுகின்றனவாம். அச்சண்டைகளுக்கு மதபேதம் காரணமல்லவாம். ஏழை முஸ்லீம் வியவஸாயிகள் அதிக வட்டி வாங்குகிற ஹிந்துக்களின் பேரில் வெறுப்பைக் காட்டுகிறார்களாம். கடன் கொடுப்போர் கடன் வாங்குவோரின் நிலங்களையும் சுவாதீன அடமானமாக வாங்கிக்கொண்டு, தங்களுடைய வட்டிகளை அறுவடையான உடனேயே கழித்துக் கொண்டு மீதி மாகுலைத்தான் வியவஸாயிகளுக்குக் கொடுக்கிறார்களாம்.

நமது மஹாராணியவர்கள் மைசூர் வீணை வித்வான் வைணிக சிகாமணி சேஷண்ணா அவர்களின் உருவப்படத்தை லண்டன் காஸ்ஷி சாலையிலிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டார்களாம்.

துர்க்கி தேச அரசாங்க ஸபையில் இஸ்மெட்பாஷா ஜனங்களை சுதேச ஆடைகளை வாங்கி உபயோகிக்கும் படிக் கேட்டுக் கொண்டாராம்.

சென்னை கவர்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ஸஹாயத்தொழில் ஆராய்ச்சி சபை சென்ற மாதம் 14 உயன்று தொழிலிலாகா ஆபீஸில் கூடிற்று கைத்தறி அபிவிருத்திவிஷயமாய்ப் பல தீர்மானங்கள் கைக்கொள்ளப் பட்டன. மதுரையில் நவீன நெசவு இயந்திரங்கள் அமைக்கப்பட்டு நெசவுக்காரர்களுக்கு நிரூபணங்கள் செய்து காட்டப்பட வேண்டுமென்றும், தொழில் பள்ளிக்கூடங்களில் கைத்தறி நெசவு போதனை அநுஷ்டிக்கப் படவேண்டுமென்றும், நெசவுக்காரர்கள் வஸ்திரங்களை தக்க விலைகளுக்கு விற்பதற்குச் சௌகரியங்களை யுண்டாக்குவதற்காகக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், ரெயில்வேக்கள் நூல்களுக்குச் சார்ஜுகளைக் குறைக்க வேண்டுமென்றும், சரிகைக்கு இறக்குமதித் தீர்வை விதிக்கப்படக்கூடாதென்றும், கவர்மெண்டு வியவஸாயப் பண்ணைகளில் பனைமரங்கள் வளர்க்கப்பட்டு பனை வெல்ல உற்பத்தித் தொழில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் கைக்கொள்ளப்பட்டன. கவர்மெண்டாருக்கு மேற்கூறிய தீர்மானங்கள் தெரியப் படுத்தப் பட்டன.

அயர்லாந்திலிருந்து ஐக்கிய மாஹாணத்திற்குச்சென்ற ஐரிஷ்ப்ரீஸ்டேடின் பிரதிநிதிகள் ஐர்லாந்தில் வியவஸாயம் அபிவிருத்தியாகி யிருப்பதைப் பற்றி மொழிந்திருப்பதை ஹிந்துபத்திரிகை வெளியிட்டிருக்கிறது. ஐர்லாந்தில் நிலங்கள் பயிருழியர்களுக்கே சொந்தப் படுத்தப்படுகின்றனவாம். அத்தேசத்தில் மிராசுதார்கள் என்றும் பயிருழியர்களென்றும் இருவகுப்பினர்கள் இல்லையாம். நிலங்கள் பயிருழியர்களுக்கே சொந்தமாயிருக்கிற படியால் அவைகள் நன்றாய்க் கவனிக்கப்பட்டு சாகுபடி செய்யப படுகின்றவாம். நிலங்கள், 10 வருஷங்களாகப் பலமடங்கு அதிக விளைச்சல்களை உண்டு பண்ணுகின்றனவாம். ஐரோப்பாவிலேயே ஜர்லாந்தைப் போல வியவஸாய உற்பத்தியை வஹிக்கிற தேசம் வேறு கிடையாதாம்.

அமெரிக்காவில் கிராமங்களில் கூட பத்திரிகைகள் பிரசுரிக்கப் படுகின்றனவாம். 50 மனிதர்களையுடைய கிராமங்கள் கூட பத்திரிகைகளை வஹிக்கின்றன. கிராமாந்தரச் செய்திகளும், வியவஸாய விஷயங்களும், தான்ய விலை வாசி விஷயங்களும் கிராம சம்பவங்களும் அவைகளில் வரையப்படுகின்றனவாம். கிராம [illegible] அவைகளை வாசிக்கத் தவறுகிறதில்லையாம் பத்திரிகைச் [illegible] காயகறி [illegible]வும் கொடுக்கிறார்களாம்.

199390

# SADHANA

# AUSADHALAYA

## DACCA (Bengal)

**—ADHYAKHA—**

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனாமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து, பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவு, அபோகத்தன்மை, சுவப்னஸிகிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி கர்ப்பப்பை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2     50 டோஸ் ரூ 5